# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 6 மே 2024



# ஸ்ரீ விசாலம் சிட் :.பண்ட் லிமிடெட்

நம்பிக்கை, நாணயம், நேர்மை, நிலையான தன்மையுடன் மக்கள் சேவையில்

## "தலைமுறைகளை கடந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள உங்களுடன்"

ஒன்றாக நாம் வளர்வோம்

**ரூ.1,00,000/-**
முதல்
**ரூ.1,00,00,000/-**

வரையிலான மதிப்புள்ள சீட்டுகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்



77th ANNIVERSARY

எங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...


SREE VISALAM CHIT FUND LTD.
SVCF
ESTD 1947
REGD. TIRUNELVELI


பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

WWW.SREEVISALAM.COM +91 86670 03356




GET IT ON Google Play

# வணக்கம் வாசகர்களே...

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

மலர் : 3 இதழ் : 6 மே 2024

இலவச வெளியீடு

**பதிப்பாசிரியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

**இதழாசிரியர்**

உமையாள்

**ஆலோசகர்**

இளமுகில். நாராயணன்

தேவகோட்டை

**இதழ் வடிவமைப்பு**

ப. சுந்தரமகாலிங்கம்

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.



**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534



கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு ...

வணக்கம் ...!

ஒவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல் , ஒவ்வொரு மாதமும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி !

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றிகள் !

மொழி, பண்பாடு, கலாச்சாரம், சமூகப் பணிகள், நிகழ்வுகள், என பன்முகப் பகிர்வாய் இந்த மலர் மிளிர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். அந்த வகையில் நம் நகரத்தார் சமூகக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை வளர்க்கும் விதமாகவும், படிப்பவர்கள் பல்துறை செய்திகளை படித்து பயனுறும் வகையிலும் நமது இதழ் தனது பங்களிப்பை தொடர்கிறது . வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக அண்மையில் மின்னிதழின் னிநுயணுூஸிசி புஊஊ வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது .

மேலும் அனைவரது ஆலோசனைகளையும் , கருத்துக்களையும் கேட்டு நமது மின்னிதழில் தேவையான மாற்றங்களை அவ்வவ்போது செய்த வண்ணம் இருக்கின்றோம் .

நகரத்தார்களிடையே வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

'இது நமது பத்திரிக்கை, நம் எண்ண வெளிப்பாடு' என்று நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள் . மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும் .

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள் , ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை **naamnagarathar@outlook.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

SWITCH TO THE FUTURE

# PALLATHUR MOTORS LLP







**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735**

**பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001**

**நமது சிந்தனைக்கு**
- மனிதர்களை விமர்சனம் செய்வது சரியா? தவறா? – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா ................ 11

**கவிச்சோலை**
- உழைப்பே உன்னதம் – அரு. சிவகாமி இராமனாதன் ................................ 36
- உயிர் ஓர் ஒப்பற்ற சக்தி – ஆர்.எம்.சண்முகம் செட்டியார் ............................ 41
- இளைஞனின் முரண்கள் – கவிஞர். எம்.சோலை ................................ 45

**பண்பாடு**
- கழுத்துரு ஓர் உறுதிமொழி சின்னம் – மெ.சண்முகம் ................................ 19

**வாழ்வியல்**
- பெண் கதவு ஆண் பூட்டு – சேவு.முத்துக்குமார் ...................................... 26

**மொழி**
- வாங்க பேசலாம் – பேரா கு. அன்பு மெய்யப்பன் .................................. 32

**பக்தித்தொடர்**
- புலையன் வீட்டில் புனிதம் கண்ட இறைவன் – புலவர் த. கோவேந்தன் ...... 42

**சமையல்**
- கோடைக்கு ஏற்ற குல்பி ஐஸ் – உமாராணி சொக்கலிங்கம் ...................... 46

**சிறுவர் பக்கம்**
- மழலையர் மழைத்துளிகள் – கல்லல். மீ. மணிகண்டன் .......................... 49

**உணவே மருந்து**
- நம்மிடமே இருக்கு மருந்து சோம்பு ........................................................ 50

**நிதிமேலாண்மை**
- பணம் சம்பாதிக்கலாம், பங்கு சந்தையில்... – க. ஹர்ஷவர்த்தினி ஸ்ரீ ....... 55

**ஜோதிடம்**
- திருமண வாழ்க்கையில் நவ கிரகங்கள் – ஜோதிடர். எல்லி ........................ 64

**படித்ததில் பிடித்தது**
- வெற்றியின் இரகசியம் ............................................................................ 71

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534
naamnagarathar@outlook.com

# சூரைக்குடி தேசிகநாதர் அறக்கட்டளை கல்வி நிதி உதவி

(சூரைக்குடி கோவிலை சார்ந்த மாணாக்கர்களுக்கு மட்டும்)





சூரக்குடி கோவில் பங்காளிகளுக்கு,

நமது தேசிகநாதர் அறக்கட்டளை சார்பாக சூரைக்குடி கோவிலை சார்ந்த மாணாக்கர்களுக்கு கல்வி நிதி உதவி ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது .

நிதி தேவைப்படும் சூரக்குடி கோவிலைச் சேர்ந்த மாணாக்கர்கள் அறக்கட்டளையின் செயலரை 20.05.2024 ம் தேதிக்குள் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க வேண்டுகிறோம்.

நன்றி.

**தண்ணீர்மலை. மு**

செயலாளர்

தேசிகநாதர் அறக்கட்டளை – சூரைக்குடி

8072664848

# மனிதர்களை விமர்சனம் செய்வது சரியா? தவறா?



கவிஞர்
அரிமழம் ப.செல்லப்பா.

நாலு பேர் கூடிப்பேசினால் அங்கே மகிழ்ச்சியாக விவாதிக்கப்படும் ஒரு செய்தி என்னவாக இருக்கும்? என்று கேட்டான் என் நண்பன். சந்தேகமே வேண்டாம், அந்த விவாதத்தில் ஈடுபடாத ஐந்தாவது நபரைப்பற்றிய மதிப்பீடாகத்தான் இருக்கும் என்றேன்.

எப்படி அவ்வளவு உறுதியாகச்சொல்கிறாய்? என்றான் நண்பன். நான் சொன்னேன், நண்பா மனிதர்களின் இயல்பே யார் சபையிலே இல்லாமல் இருக்கிறார்களோ அவர்களைப்பற்றி, எதுவுமே தெரியாமல், எதையும் அறிந்து கொள்ளாமல், அவரைப்பற்றி என்னவெல்லாம் அவர்கள் நினைக்கிறார்களோ அவற்றையெல்லாம் உண்மையைப்போல சொல்லி மகிழும் குணம் கொண்டோர்தான் பூமியில் அதிகம் என்றேன்.

ஒருவரைப்பற்றி துளி அளவுகூட உண்மையற்ற செய்திகளை மதிப்பீடு என்ற பெயரில் நான்கு பேர்களுக்கு முன்னால் சொல்லி,அவரது நிலைப்பாட்டிற்கு குந்தகம் விளைவிப்பார்கள். இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது இவர்களது வாடிக்கை!

ஒருவரது வளர்ச்சியைப் பொருத்துக்கொள்ள முடியாதவர்கள்,ஒருவரது ஆற்றலை ஏற்றுக்கொள்ள முடியாதவர்கள், அவரைப்பற்றி பொது வெளிகளில் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் விமர்சிப்பதுண்டு. இத்தகைய மனிதர்கள் பிறரது வளர்ச்சியை மனமகிழ்ந்து பாராட்ட மனம் இல்லாதவர்கள். நான்கு பேர் ஆதரவிலோ,அல்லது அடிமட்டத்தில் இருந்து உழைத்து அதன் மூலம் தொழிலைத்தொடங்கி வெற்றி பெற்றோரிடம்

சென்றுஏதாவது ஒரு உதவி கேட்டு கிடைக்காத காரணத்தால், விமர்சகர் தனது கற்பனை குதிரையைத் தட்டிவிட்டு, அவரைப்பற்றி தான் நினைப்பதையெல்லாம் விமர்சனம் என்ற பெயரில் கொட்டித் தீர்ப்பார். நான்கு பேர் இதனைக்கைதட்டி வரவேற்பார்கள். இவன் எப்படி இவ்வளவு உயரத்திற்கு வந்தான் தெரியுமா? இவன் வேர்வை சிந்தி உழைத்து வந்தானா? இல்லை பிறக்கும் போதே என்ன பணத்தோடு பிறந்தானா? நான்கு பேரை ஏமாற்றி அவர்களின் பணத்தை முழுவதும் கொள்ளை யடித்து, அதனால் இந்த உயரத்திற்கு வந்தவன். இவனைப்பற்றி புகழ்ந்து பேச என்ன இருக்கிறது? என்பார்கள் இந்த தரங் கெட்ட விமர்சகர்கள்.

எல்லா மனிதர்களையும் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும் ஆற்றல் தங்களுக்கு உண்டு என்று நினைக்கும் மனிதர்கள் இவர்கள். இதுபோன்ற மனிதர்களால் சமுதாயத்தில் ஏற்படும் விளைவுகள் எப்படி இருக்கும்? என்பதைச் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும்.



ஒருவரை எப்படி மதிப்பீடு செய்வது? மதிப்பீட்டுக்கு உள்ளாகும் மனிதர் நல்லவரா? அல்லது கெட்டவரா? என்பதை அறிந்து கொள்வது எப்படி?

ஒரு மனிதரிடம் பழகலாம் என்று நினைப்போம். இல்லையில்லை அவரை விட்டு விலகலாம் என்று நினைப்போம். எதற்கும் நாம் ஒரு எச்சரிக்கையோடு இருப்போமே! என்றும் எண்ணுவோம்.

மனிதர்களைப்பற்றி தேவையற்ற விமர்சனம் செய்வோர் பெற்ற நன்மை என்ன? ஒரு சில நிமிடங்கள் மட்டுமே அவர்களிடம்

உ

VALATHI
Since 2005

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி)லிட்.

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

## எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு

**ரூ.1,00,000/- முதல்**

**ரூ.25,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பதினேழு (17) ஆண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை.**

0431-2760064,80
3580292,7968005.

துவக்கம்
2005

94439 86143

## TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-95, மூர்த்தி ஸ்கொயர், முதல் தளம்,
5வது கி ரா ஸ் தில்லைநகர் மெயின் ரோடு,
MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி,
(ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ சத்தியமேவ ஜெயதே ★

மகிழ்ச்சி நீடிக்கும் என்பதை அறியாதவர்கள். உங்களின் மதிப்பீடு சரியில்லை எனத்தெரிந்து விட்டால், உங்களை இந்த சமூகம் மனிதன் என்றே ஏற்காது என்பதை நினைவிலே வையுங்கள். மனிதன் என்கின்ற நிலையில் இருந்து நீங்கள் மாக்கள் என்ற நிலைக்கு மாறி விடுவீர்கள்.

தேவையற்ற விமர்சனங்களை நீங்கள் மற்றவர்கள் மீது தொடுக்காமல் இருந்தால், வாழ்க்கையில் நீங்கள் பிரிவுகளைச் சந்திக்க தேவையில்லை. வலிகளைத்தாங்கிக் கொள்ளத்தேவையில்லை.தேவையற்ற எதிர் பார்ப்புகளும் உங்களிடம் இருக்காது.கசப்பான அனுபவங்கள் உங்களுக்கு எதுவும் நிகழாது. எனவே நீங்கள் எந்த தனி மனிதனைப்பற்றியும் வாய்க்கு வந்தபடி எல்லாம் விமர்சிக்கும் வேலையை விட்டுவிடுங்கள். உப்பு இருந்தால் தான் உணவு ருசிக்கும்! உண்மை இருந்தால் தான் விமர்சனம் ரசிக்கும்!



எந்த விலங்காவது, இன்னொரு விலங்கை விமர்சித்தது உண்டா? அல்லது புரளி பேசியது உண்டா? விலங்கிற்கு தெரிந்த பண்புகூட தெரியாமல் மனிதன் வாழ்கிறான்.விலங்கு களுக்குத்தேவைகள் என்பது மிக மிகக்குறைவு. உணவு, உடல் பற்றிய கவலை, தங்குமிடம், எதுபற்றியும் விலங்குகள் என்றைக்கும் கவலைப்படுவது இல்லை. ஆனால் மனிதன் விலங்கிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவன்.

மனிதனின் தேவைகள் அதிகமானது. தேவைகளைத்தேடியே மனிதன் தனது வாழ்க்கையைத் தொலைக்கிறான். மனிதன் தனது தேவைகளைத்தேடி பெறுவதற்கு, நல்ல வழிகளும், கெட்ட வழிகளும்

உள்ளன. ஆனால் அவன் எந்த வழியைத் தேர்வு செய்கிறான்? என்பதைப் பொருத்துத்தான் அவனை யார்? என்று இந்த சமூகம் முடிவு செய்யும்.

மனிதன் தனது சூழ்நிலைக்கு ஏற்ப தவறு செய்திருக்கலாம். அந்த தவறுகளுக்காக அவன் மற்றவர்களால் தண்டிக்கப்பட்டும் இருக்கலாம். நான் ஏன் தவறு செய்தேன்? என்று தன்பக்கம் உள்ள நியாயத்தை எடுத்துச் சொல்லவும் அவனால் முடியும்.

விலங்கின் பெயரைச் சொன்னால் அதன் குணம் இதுதான் என்று நம்மாலே சொல்ல முடியும். அப்படிப் பட்ட விலங்குகளிடம், நாம் கவனமாகப் பழகமுடியும்! வாழமுடியும்.

மனிதர்களின் குணத்தை நம்மாலே அறிந்து கொண்டு ஒருநாளும் பழகவே முடியாது. அதனால்தான் மனிதர்களை ஒரு வட்டத்துக்குள் அடைத்து வைக்க இயலாது. அதனால்தான் புரளி பேசுகிற மனிதர்களை, விமர்சனம் செய்கின்ற மனிதர்களை நம்மாலே புரிந்து கொள்ள முடியாமல் போய்விடுகிறது.

இப்படிப்பட்ட விமர்சகர்கள் மற்றவர்களைப்பற்றி, இவர் இப்படித்தான்! என்று சொல்லும் பொழுது,அது முற்றிலும் பொய் என்று தெரிய வருகின்ற பொழுது, அவர்களின் தவற்றை உணராமல், அவர்களது விமர்சனத்திற்கு உள்ளான மனிதரை புரிந்துகொள்ள முடியவில்லை! என்பார்கள்.



இத்தகைய விமர்சகர்களை நாம் புரிந்து கொள்வது தான் கடினமானது. காரணம் அதற்கென்று ஒரு மனநிலை நமக்குத் தேவைப்படுகிறது. அவதூறு பரப்பும் வகையில் விமர்சிக்கும் மனிதர்களை

நாம் மதிக்க வேண்டியதேயில்லை.அத்தகையோரை நாம் இனம் கண்டு கொண்டுவிட்டால், அவர்களை புறம்தள்ளி விடலாம்.

உண்மையான விமர்சனம் செய்வோரை மதிப்போம். அவர்களின் விமர்சனங்கள் நம்மை உயர்த்தும் என்று நம்புவோம். சுட்டிக் காட்டப்படும் தவறுகளைப்பற்றி விவாதிப்போம். வாய் புளித்ததோ! மாங்காய் புளித்ததோ!என்ற வகையில் விமர்சனங்கள் எழுப்பப்பட்டால் அவற்றை துணிச்சலோடு எதிர் கொள்வோம்.

நெஞ்சில் உரமுமின்றி நேர்மைத்திறமுமின்றி, வஞ்சனையோடு வாரி இறைக்கும் விமர்சனங்களைக்கண்டு மலைத்து நிற்காதீர்கள். விமர்சனம் என்பது விருப்பு வெறுப்பு நீக்கி விமர்சிக்கப்படவேண்டுமே தவிர,தங்களின் மனநிலைக்கு ஏற்ப மற்றவர்களை மதிப்பீடு செய்வது பெருங்குற்றம் ஆகும்.

மனிதர்களின் மனநிலையைப்புரிந்து கொள்வது மிகக்கடினம் என்றாலும், இதுபோன்ற மதிப்பீடுகளை வழங்கும் மனிதர்களோடு,நாம் வாழ்வது என்பது,ூறவிமி ஆலி ழஷ்மிஜூ மிஜூள ய்யிலிழஎன்றுதான் நினைக்க வேண்டும்.




மனிதர்களை மதிப்பீடு செய்வது என்பது எளிதான ஒன்று அல்ல. மதிப்பீடு என்பதே கடினமானது தான். உண்மைகள் எப்போதும் நம்மை உரசிப்பார்க்கும்.அதைத் தாங்கிக் கொண்டு,மீண்டு எழுந்தால் வெற்றி கிட்டும்!

தரமான மதிப்பீடுகளை தலைவணங்கி ஏற்றுக் கொள்வோம். அதே நேரத்தில் தரமற்ற விமர்சனங்களை தலை நிமிர்ந்து எதிர் கொள்வோம்! தாறுமாறான விமர்சனங்களை தள்ளி வைப்போம்.

அத்தகைய விமர்சகர்களை இந்தச் சமுதாயம் எள்ளி நகையாடும் என்பதை உரக்கச்சொல்லி மகிழ்வோம்!

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன் நண்பர்களே! இந்தத் தலைப்புக்குறித்து உங்களது மதிப்பீட்டை எனக்குச்சொல்லுங்கள்! என்ன சரிதானே!




கட்டுரை ஆசிரியர்

தொடர்புக்கு: 9791033913,
aamchennai@gmail.com



நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram




"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



## PL RAMANATHAN (KANDANUR)

**INSURANCE ADVISOR**
**LIC of india, Thiruvotriyur Branch**
**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

**Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.**
**Tel.: (O) 2345 1530 (M) 99401 32132**
**E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com**

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA

# கழுத்துரு ஓர் உறுதிமொழிச் சின்னம்



காரைக்குடி
மெ. சண்முகம்

நாட்டுக்கோட்டை. நகரத்தார்களின் பாரம்பரியச் சிறப்புகளை எடுத்தியம்பும் மங்கல அணிகலனே கழுத்துரு (கழுத்து + உரு) ஆகும்.

கழுத்துருவை அறியாத நம்மவர் எவரும் இலர் என்று சொல்லும் அளவிற்கு அது நம் சமூகத்தில் சமூக வாழ்க்கையில் சிறப்பிடம் பெற்றிருக்கிறது.



கழுத்தீரு என்று பேச்சு வழக்கில் வழங்கப்பெற்று நல்லன அல்லன இரண்டிலும் பங்கு பெறும் கழுத்துரு முற்காலத்தில் நம் பெண்களின் அன்றாட மங்கல அணிகலனாகவும் இருந்திருக்கலாம்


பிறகு பலவித சிரமம் கருதி 1900 வரை உள்ள கால கட்டப்பெண்கள் அன்றாடம் அணிவதற்கு இதற்குப் பதிலாக சிறுதாலி ஜோடிப்பு என்பதை அணிந்திருக்கிறார்கள். சின்னக்கழுத்துரு என்று வயதானவர்களால் வழங்கப்பெறும் இதற்கும் கழுத்துருவுக்கும் சிற்சில ஒற்றுமைகள் உள்ளன. இதை இன்றும் நாம் படைப்பு நகைகளில் பார்க்கலாம். இதற்குப்பிறகு 1980 வரை உள்ள கால கட்டத்தில் பெண்கள் அன்றாடம் ஜோடிப்புத்தாலியை அணிந்து வருகின்றனர். அதன்பிறகு மணமானவர்களின் அன்றாட மங்கல அணிகலனாக சிறுதாலி இருந்து வருகிறது. இப்படியாகக் கழுத்துரு, அன்றாடத் தேவைகளுக்கு ஏற்ப மாறி வந்திருக்கிறதை நாம் அறிய முடிகிறது.

கழுத்துரு என்ற கோர்வையில் மேற்பகுதி கீழ்பகுதி என இரண்டு பகுதிகளும் இரண்டு பகுதிகளிலும் சேர்த்து 31 உதிரி பரகங்களும் 3 தனி உதிரிபாகங்களும் இருப்பது நாம் அறிந்ததே!

இந்தக் கோர்வையும், கோர்வையைத் தாங்கி நிற்கின்ற நூலும், பகுதிகளும் உதிரிபாகங்களும் (உருப்படிகளும்) ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணத்தை ஏந்தி நிற்கின்றன. நம் முன்னோர்கள் இதற்கு விளக்கம் சொல்லிவிட்டுச் செல்லாததால் பின்வருமாறு இருக்கலாம் என்பது என் கருத்து.

கழுத்துரு என்ற கோர்வை ஒரு குடும்பம் போன்றது. நம் நகரத்தார் வழக்கில் சொன்னால் ஒரு புள்ளி இந்தக் கோர்வையைத் தாங்கி இருக்கும் நூல் 21 பாகங்களைக் கொண்டு 3 ஆக மடிக்கப்பெற்று ஒன்றுக்குள் ஒன்றாகக் கொடுத்து வாங்கப்பெற்று 7 பாகமாக ஆகி இருப்பது. இந்த (3X7பாகம்) 21 பாகம் 21 தலைமுறைப்பாரம்பரியத்தைத் தக் குறிக்கிறது. இந்து மத சாத்திரத்தில் மூவேழு இருபத்தியோரு






தலைமுறையும் உருவ வழிபாடும் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அது போலத்தான் இதிலும் முக்கியத்துவம் பெறுகிறது.

கழுத்துருவின் மேற்பகுதி மணமகளையும் கீழ்பகுதி மணமகனையும் குறிப்பிடுகிறது. எப்படித்திருப்பூட்டுதலின் பொழுது மணமகள் மேல் நிற்க மணமகன் கீழ் நின்று (வட்டகைக்கு ஏற்ப சில மாற்றங்கள் இருக்கும்) திருப்பூட்டி குடும்பத்தைக் கணவனுக்கும் மேலாக நின்று நல்வழி செலுத்துவேன் என்று மனைவி உறுதிமொழி எடுப்பதைச் சொல்லாமற் சொல்லுகிறாளோ அதுபோலத்தான் இதுவும்.

உதிரிபாகங்கள் 31+3 ஐயும் உற்றுப்பாருங்கள் அவற்றின் பெயர்களைச் சொல்லிப்பாருங்கள் பொருள் தன்னாலேயே தெரியும்.

மேற்பகுதியில் உள்ள திருமாங்கல்யம், திருமகளே உருவான மனைவியைக் குறிக்கிறது. திருமகள் வருகைபோல் மனைவி வருகையால் பேர் பெற்றவர்கள் உலகில் பலர் உண்டு. அதிலும்

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2024
42nd
ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

நம்மவர்களில் பற்பலர் உண்டு.

கீழ்ப்பகுதியில் உள்ள லெட்சுமி ஏத்தனம் 4 தூண்களாலோ சுவர்களாலோ எழுப்பப் பெற்றிருக்கும். வீட்டைக்குறிக்கிறது வீட்டின் தலைவனான கணவனையும் குறிக்கிறது.

மேற்பகுதியில் உள்ள 2 கடைமணிகளும் கீழ்பகுதியில் உள்ள 2 கடைமணிகளும் ஆக மொத்தம் 4 கடை மணிகளும் 4 திசைகளையும் குறிக்கின்றன. அதாவது கணவன் நாற்புறமும் (நாலாபக்கமும்) சென்று அறவழியில் பொருள் ஈட்ட வேண்டும் என்பதன் பொருள்.

4 ஏத்தனங்களும் உள்ளங்கை பூமியைப் பார்த்திருக்கும் விதத்தில் அமைந்த 4 கைகள் போன்றது. மேல்பகுதியில் உள்ள 2 ஏத்தனங்கள் மனைவியின் 2 கைகள் கீழ் பகுதியில் உள்ள 2 ஏத்தனங்கள் கணவனின் 2 கைகள். இந்த 4 ஏத்தனங்களும் அவர்கள் நடத்தப்போகும் இல்லறத்திற்கு அவர்கள் கை கொடுப்போம் என்று உறுதி கூறுவதன் பொருள் இந்த உறுதிமொழியைத்தான் சமஸ்கிரு. மந்திரமும் அதன் இயல்புக்கு ஏற்றவாறு சொல்கிறது.

2 சரிமணிகளும் இருபால் குழந்தைகளைக் குறிப்பிடுகிறது. அதாவது மணியான ஆண், பெண் குழந்தைகளை ஈன்றெடுத்து நற்பெற்றோராகத் திகழ்வோம் என்பதன் பொருள். வம்ச அபிவிருத்திற்கு ஆண்வாரிசு முக்கியம் என்றாலும் சமூக அபிவிருத்திக்கு இருபால் குழந்தைகளும் வேண்டப்பெறுகின்றன.

திருமாங்கல்யத்திற்கு அடுத்த பெருமை பெறுவது உரு. உரு



என்றால் உருவம் என்று பொருள். அப்படி என்றால் யாருடைய உருவம்? நம் தந்தை வழி தெய்வத்திரு முன்னோர்களின் உருவம். முன் சொல்லியது போல 21 தலைமுறை முன்னோர்களில் திருமணத்திற்கு மணமகனின் தந்தை வழி அய்யா கலந்து கொண்டோ கலந்து கொள்வதாகப் பாவனை செய்து கொண்டோ திருமணப்பணத்திருப்பேட்டில் அவர்கள் பெயரில் முதலில் மொய்ப்பண வரவு வைத்து, தகப்பனார் திருமணம் செய்து வைத்து வாழ்த்தி வழி நடத்துவதால் இந்த இருவர் நீங்கலாக மீதி உள்ள 19 முன்னோர்களுக்குத்தான் 19 உரு. அதாவது மணமகன் வழி முன்னோர்களை, முன்னோர் வழியை உருவேற்றி வாழ்வோம் அவர்கள் எங்களோடு இருந்து எங்களை வாழ்த்தி வழிநடத்தட்டும் என்று பொருள்.

நம் வழக்கப்படி பெண்களுக்குப் புகுந்த வீடுதான் பிறந்த வீட்டை விட முக்கியமானது. புகுந்த வீட்டைத்தான் பெருமை பெறச் செய்யவேண்டும் என்ற எண்ணத்தை உருவேற்றுவதற்காகத்தான் மணமகன் வழி முன்னோர் மட்டும் குறிக்கப்பெறுகிறது.

முற்காலத்தில் கழுத்துருவை மணமகன் வீட்டார் செய்திருக்கலாம் பிறகு அதற்குரிய பொன்னை மணமகள் வீட்டிற்கு வழங்கி அவர்களையே இதர நகைகளுடன் சேர்த்து இதையும் செய்யச்சொல்லி இருக்கலாம். (பிறகு வந்த மாற்றத்தால் எல்லாம் பெண் வீட்டாரையே சேர்ந்து விட்டது) இதை மணமகன் வீட்டார் கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல் (முகூர்த்தம் வைத்தல்) கழுத்துரு வாங்கப் போகுதல் என்ற நிகழ்ச்சிகள் வாயிலாக அறிந்து 19 உரு என்பது மணமகன் வழி முன்னோர்கள் என்று உறுதி செய்ய முடிகிறது.

31உதிரிபாகங்களுக்குமாக மேற்கூறிய எல்லாவற்றையும் சேர்த்துச் சொன்னால், மணமகள் மணமகனை நோக்கி, 'தங்கள் 21 தலைமுறைப் பாரம்பரியத்துடன் 21 முன்னோர்களில் 19 பேருக்கு உருவங் கொடுத்து இருவர் உடன் இருக்க திருமகளே உருவான நான் அவர்கள் வாழ்த்துதலுடனும் வழி நடத்துதலுடனும் நாலா புறமும் சென்று அறவழியில் தாங்கள் ஈட்டிவரும் பொருளை வைத்து

மணியான ஆண் பெண் குழந்தைகளை ஈன்றெடுத்து, தங்களுடன் தங்களுக்கும் மேலாக நின்று இல்லறம் நடத்த நான் சம்மதிக்கிறேன். ' தாங்களும் சம்மதிக்கிறீர்கள் என்று உறுதிசொல்லி மங்கல அணிகலனை ஏற்கிறாள் என்பதாகும்.

முன்னர்க்காலங்களில் நம்மவர்களில் நன்கு வாழ்ந்த பெரியவர் திருப்பூட்டி இருக்கிறார். இது விபரம் இசை குடிமானம் என்ற தலைப்பில் சொல்லப் பெற்றிருக்கிறது. திருமணத்தன்று 31 உதிரிபாகங்கள் வழியாக மணமகனும் மணமகளுமாக உறுதிமொழி ஏற்பது போல அமைகிறது. அதன் பின்னர் 2 பகுதிகளிலும் சேர்த்துக் கோர்க்கப்பெறும் குச்சி, தும்பு, துவாளை என்ற 3 தனி உதிரிபாகங்கள் கணவனும் மனைவியுமாக உறுதிமொழி ஏற்பதைச் சொல்கின்றன.

குச்சி ஊன்று கோலைப்போன்றது. தும்பு பிடியைப் போன்றது. துவாளை தடியைப் போன்றது. மணமக்களாக இருந்தவர்கள் கணவன் மனைவியான பிறகு இல்லறத்தை ஊன்று கோலாகக் கொண்டு ஒருவரை விட்டு ஒருவர் பிரியாது எதிர்வரும் பிரச்சனைகளை விலக்கி வாழ்வில் வெற்றி பெறுவோம் என்று உறுதி சொல்வதாகும். தனித்தும்பு இந்த 3ன் பதிலியே.



இங்ஙனம் சிறந்து விளங்கும் நம் கழுத்துரு அரக்குக்கழுத்துரு விராகன் எடைக் கழுத்துரு என்பன போன்ற பல நிலைகளைக் கடந்து இன்று **Pressing Type** நிலையை அடைந்து சிறிய அளவில் இருக்கிறது. இன்று கழுத்துரு இருக்கக் கூடிய அளவில்தான் பழைய காலங்களில் திருவாதிரைப் புதுமைக் (அரைக்கல்யாணம்) கழுத்துரு, இருந்தது என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். இது எந்த நிலையை அடைந்து எந்த அளவில் இருந்தாலும். இது தாங்கி இருப்பது 21 தலைமுறைப்பாரம்பரியத்தை. இது விதையாவது ஆயிரங்காலத்துப் பயிருக்கு.

பெண் கதவு ஆண் பூட்டு - 6

# இருவகைப் பெண்கள்



சேவு.முத்துக்குமார்,
காரைக்குடி
94432 88931

ஓய் பொண்டாட்டி... ஆயிரம் சண்டைகள்
உன்னிடம் நான் போட்டாலும் நீ இல்லாமல்
என் வாழ்க்கை இல்லை என்பது உண்மை.
என் உயிரே நீ தானடி என் செல்லம்!

மனைவி என்ன செய்தாலும், அதைக் குற்றமாகவும், குறையாகவும் பார்க்கும் ஆண்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். காரணம் சூழ்நிலை திருமணத்திற்கு முன் எதையோ எதிர்பார்த்து, பின் எதுவோ கிடைக்க அவனது மொத்தக் கோபமும் மனைவி மீது திரும்புகிறது. பிறந்தவீட்டில் வறுமை மிக்க குடும்பத்தில் பிறந்த பெண்கள், புகுந்த வீட்டில் அடங்கித்தான் போகிறார்கள், காரணம் கிடைத்த வாழ்க்கையைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்ற பயமே.

கல்லானாலும் கணவன்

புல்லானாலும் புருஷன் அவன்

ஃபுல்லா போட்டுட்டு வந்து அடித்தாலும் புருஷன்

என்ற மனநிலையில் இன்றும் பெண்கள் பலர் வாழ்வது உண்மை.

தும்பை விட்டு வாலைப் பிடித்த கண்ணகியைப் போல, கோவலனிடம் அமைதிகாத்த கண்ணகியாகவும் இருக்க வேண்டாம். கணவன் இறந்தான் என்ற செய்தி கேட்டுக் காளியாக மாறி நீதி கேட்டு மதுரையைத் தீக்கிரையாக்கிய கண்ணகியாகவும் இருக்க வேண்டாம். தவறிழைத்தவன் கணவன் என்று தெரிந்தவுடன், அவனைத் தக்க வழியில் நெறிப்படுத்தியிருந்தால் கண்ணகியின் இல்லறம் நல்லறமாகியிருக்கும்த் தவறு செய்த அவனை நம்பி, தன் சிலம்புகளைக் கொடுத்து விற்று வரக் கூறும் கண்ணகி தன் மனையான் இறந்தான் என அறிந்து பல்லுயிர்களைக் கொல்லும் பாதகத்தைச் செய்கிறாள். கண்ணகியின் பாத்திரம் வாயிலாக நாம் அறிவது பெண்கள் இருவகை.

1. பொறுமையின் இருப்பிடம்

2. பொங்கி எழும் பூகம்பம்


இரண்டு குணமுமே இல்லறம் சிறக்கப் பயன்படாது. பொறுமையாகவும் வேண்டாம், பூகம்பமாகவும் வேண்டாம். இரண்டுக்கும் இடையில் இருந்தாலே இல்லறம் சிறக்கும்.

ஒரு காலத்தில் பொருளாதாரத்தில் பின் தங்கியிருந்த பெண், இன்று வேலைக்குப் போவதால், பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றுவிட்டாள். ஆணுக்கு இணையாகப் பெண்ணும் சம்பாதிக்கத் துவங்கிவிட்டாள். இத்தகைய நிலையிலே கணவனை எழுப்பி, காபி கொடுத்து, வாசல் தெளித்து, கோலம் போட்டு, குழந்தைகளைப்பேணி, சமையல் செய்து, அனைவரையும் அனுப்பிவைத்த பின் அலுவலகம் வந்து, நொந்து பல போராட்டங்களைச் சந்தித்து, மாலையில் இல்லம் திரும்பி மறுபடியும் காபி போட்டு, சிற்றுண்டி தயாரித்து, இல்லம் சுத்தம் செய்து, குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்து, படிக்க வைத்து இரவு உணவு தயாரித்து, தூங்க வைத்து, பின் தூங்கவிடாமல் செய்யும் கணவனுக்கு ஈடு கொடுத்து .. அப்பப்பா.... 24 மணிநேரமும் பம்பரமாய்ச் சுழலும் பெண்ணானவள் இன்று விழித்துக் கொண்டுவிட்டாள். ஏன்? எதற்கு? எப்படி? எனக் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டாள்..

துணிகளுக்கு அவள் சோப்புப் போட்டால், கணவன் அதனை அலசிக் காய வைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறாள்.

சப்பாத்திக்கும் மாவு பிசைந்து தந்தால்தான், சப்பாத்தியைச் சுட்டெடுத்துத் தருவேன் என்கிறாள்.

ஒட்டடை அடித்தால் தான் வீட்டைக் கூட்டுவேன் என்கிறாள். காய்கறி வாங்கி வந்தால் தான் சமைத்துத் தருவேன் என்கிறாள்.



தனது ஒவ்வொரு வேலையிலும் கணவனின் பங்கு இருக்க வேண்டும் என்கிறாள். ஆனால் கணவனோ அலுவலகத்தில் செக்குமாடு மாதிரி வேலை பார்த்து விட்டு, வீட்டுக்கு வந்து நிம்மதியைத் தேடுகிறான், விருப்பமான செயல்களைச் செய்ய எண்ணுகிறான்.

ஆகவே இருவேறுபட்ட மனங்கள் அங்கே இணைய மறுக்கின்றன. இல்லறம் பூகம்பமாய் வெடிக்கிறது. ஆண் என்பவன், அடுப்பூதப் பிறந்தவள் பெண் என நினைத்துப் பழங்கதைகள் பேசி,

அதன்படி பெண்ணானவள் நடக்க வேண்டும் என நினைத்தால், இக்காலத்தில் இல்லறம் சிறக்காது. இயன்றவரை மனைவிக்குத் துணையாகி, அவளோடு இணக்கமாகி, பெண்ணுக்காக ஆண்களால் காலங்காலமாக விதிக்கப்பட்ட விதிகளின்படி வாழ வலியுறுத்தாமல், சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு, அவளுக்கு உதவிகள் பல செய்து வாழ்வதே வாழ்வு சிறக்கும் வழியாகும். தாத்தா காலத்தில் பெண்கள் இருந்தது போல இப்பொழுதும் இருக்க வேண்டும் என விரும்பினால் இல்லறம் ரணகளமாகும்.

பெண்கள் மிகவும் நல்லவர்கள். ஆண்கள், ஒட்டடை அடிப்பது போல நடித்தால் போதும் ஓடிவந்து கம்பை வாங்கிவிடுவார்கள். கூட்டுவதற்கு விளக்கமாரைக் கையில் எடுத்தால் போதும் உங்களை யாரு இதெல்லாம் பண்ணச் சொன்னது எனச் செல்லமாகத் திட்டி விளக்குமாரைப் பிடிங்கிக் கூட்டுவார்கள்.

வீட்டு வேலைகளைச் செய்ய முற்பட்டால், உங்களுக்கு ஒன்றும் தெரியாது. பேசாம ஒரு இடத்தில் உட்காருங்கள் என நமக்குத் தெரிந்தாலும் நம்மிடமிருந்து வேலை வாங்கத் துணிய மாட்டார்கள்.

ஆகவே பெண்ணை அதிகாரத்துக்குள் அடக்காமல், அன்பினால் கட்டிப்போட்டால் அத்தான் அத்தான் என வலம் வருவார்கள். ஏனென்றால் பெண்கள் அன்புக்கு அடிபணிவார்களே தவிர, அதிகாரத்துக்குக் கட்டுப்பட மாட்டார்கள், ஆண்களின் அதிகாரமெல்லாம் செல்லும், ஆனால் இல்லத்தில் செல்லாது.

நன்றி : ஓவியம், மோகன் மணிமாலா

– தொடரும்.

# உங்களிடம் பழைய ஷேர் சர்டிபிகேட்கள் உள்ளதா ?




செபி சுற்றறிக்கையில் ஷேர் சர்டிபிகேட்களை எலக்ட்ரானிக் வடிவில் அதாவது டீமேட் கணக்கில் மாற்ற 30.06.2024 வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. 7 வருடங்கள் தொடர்ந்து டிவிடெண்ட் பெறாமல் இருந்தால் அத்தகைய கம்பெனி ஷேர்கள் IEPF (INVESTOR EDUCATION AND PROTECTION FUND) மாற்றப்படும் தங்கள் குடும்பத்தில் அவ்வாறு ஏதேனும் ஷேர்கள் இருந்தால் மற்றும் காணாமல் போய் இருந்தால் வாரிசுதாரர்கள் தகுந்த ஆதாரங்கள் சமர்ப்பித்து அவர்கள் பெயரில் டீமேட் கணக்கிற்கு மாற்றி கொள்ளலாம்.

## கடைசி தேதி: 30.06.2024

மேலும் விவரங்களுக்கு :

**S.ராமநாதன் – 9840466531.**

**RM.சுப்பிரமணியன் –9840635152.**

# கூடைகள் விற்பனைக்கு

அழகான நல்ல தரத்துடன் நீண்ட நாள் உழைக்கக் கூடிய செட்டி நாட்டு கூடைகள் தயாரித்து விற்பனை செய்கிறோம்

உங்கள் வீட்டு உபயோகத்திற்கு மற்றும் Return gift Purpose க்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்.



தொடர்புக்கு:
N.சித்ரா, ஆத்தங்குடி
9585328941



# வாங்க பேசலாம் ..!

## ( செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள் ) பகுதி- 6

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம்...வாங்க பேசலாம்..!



-பேரா.கு.அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி



ஒரு இனத்தின் வளம் என்பது அதனுடைய உணவு முறைகளிலும், சொற்களிலுமே அமையும். அந்த வகையில் நம் செட்டிநாட்டின் வளத்தைக் காட்டும் விதத்தில் நம் உணவு வகைகள் அமைகின்றன. அவை உலகப் பிரசித்தி பெற்றவை. அதே போல் நம் இனத்தார் மட்டுமே பயன்படுத்தும் சொற்களும் தனித்துவம் மிக்கவை. நம் இனத்தின் வளத்தைப் பறைசாற்றுபவை. அப்படிப்பட்ட சொற்களில் சிலவற்றை இம்மாதம் காண்போம்.

### அகப்பை

உணவு பரிமாறுவதவற்குப் பயன்படும் கரண்டி. ( கரண்டி

என்பதும் தூய தமிழ்ச்சொல்லே) தற்போது பயன்பாட்டில் இல்லாத ஒரு பொருள். நம் முன்னோர்கள் வீட்டிலேயே பயன்படுத்தியது. ஒவ்வொரு வீட்டிலும் பெண்ணுக்கு வைக்கும்



சீரில் இவை இருக்கும். பல தலைமுறைகளாகப் பயன்படுத்தப்படாமல் இன்றளவும் வீடுகளில் அறைகளில் அடைபட்டுக் கிடக்கும் ஒரு பொருள் மரக்குச்சியின் முடிவில், கொட்டாங்கச்சி துளைகளில் சொருக்கப்பட்டிருக்கும்.

சோறு, குழம்பு, காய்கறி, முதலிய சமைத்த உணவுப் பொருட்களை பரிமாறுவதற்கு உதவும் நீண்டி பிடியுள்ள மரக்கரண்டி. அகழ்தல் என்னும் வேர்ச்சொல்லில் இருந்து பிறந்தது அகப்பை. அகழ்தல் என்றால் தோண்டுதல் அல்லது முகத்தல் எனப் பொருள் கொள்ளலாம். அந்த வகையில் உணவுப் பொருட்களை அள்ளுவதால் இப்பெயர் பெற்றிருக்கிறது. அகழ்தல் அகழ்ப்பு அகழ்ப்பை அகப்பை.

அகப்பை தொடர்பான பழமொழிகள் பல உண்டு. அகப்பை அறுசுவை அறியுமா?

அகப்பைக்கு வால் முளைத்தது ஆராலே? ஆசாரியாலே. அகப்பைக்குத் தெரியுமா அடிசிற் சுவை? அகப்பை பிடித்தவன் தன்னவன் ஆனால், அடிப்பந்தியில் இருந்தால் என்ன, கடைப்பந்தியில் இருந்தால் என்ன? . இப்பழமொழிகளின் மூலம் இச்சொல் அதிக அளவில் பயன்பாட்டில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. மேலும், அன்றாட வாழ்விலும் அகப்பை பயன்பட்டுள்ளது என்பதையும் அறியலாம். இன்று வழக்கொழிந்துவிட்டது அகப்பை.

## அகலக்கால்

நான் அப்பவே சொன்னேன் அகலக்கால் வைக்காதடான்னு. கேட்டாதானே. இப்போ அவதிப்படுறான் என்று இன்றும் நம்மவர்கள் பேசக் கேட்டிருப்போம். தன் தகுதிக்கு மீறிய, செலவுகளோ, செயல்களையோ செய்யும் போது, இவ்வாறு கூறுவது வழக்கம். நம் கால்களைக் குறிப்பிட்ட அளவு மட்டுமே அகட்டி வைக்கமுடியும். அதையும் மீறி அகட்டினோமானால் நாம் விழுந்துவிடுவோம்.



இதை அடிப்படையாகக் கொண்டே, நம் தகுதிக்கு மீறிய செயல்களில் ஈடுபடும்போது, அது தோல்வியில் முடியலாம் என்பதைக் குறிக்கவே அகலக்கால் வைக்காதே என்னும் சொல் உருவாகியிருக்க வேண்டும்.

## அகஸ்மாத்து

நேத்து ராமநாதன பிள்ளையார்பட்டியில அகஸ்மத்தா பார்த்தேன். பாத்து ரொம்ப நாளாச்சா. நிறைய நேரம் பேசிக்கிட்டே இருந்தோம் இங்கு குறிப்பிடப்படும் அகஸ்மாத்து என்னும் சொல் வடமொழிச் சொல். தற்செயலாக, தீடீரென்று என்று இச்சொல்லுக்குப் பொருள்கொள்ளலாம்.

## அச்சு அசல்

கடன் வாங்குன தெற்குத் தெரு கோபால் மாதிரி ஒரு ஆள சந்தையில பார்த்தேன். வேகமா போயிட்டான். அச்சுஅசல் அவனேதான். அவனாதான் இருக்கனும். தப்பிச்சுட்டான். என்று சொல்லும் போது, அச்சுஅசல் என்னும் சொல் கவனிக்கத்தக்கது.



அச்சு என்பது ஒரு பொருளின் அச்சு. பொருள் என்ன உருவமோ அதனை அச்சும் கொண்டிருக்கும். அசல் என்பது நகலுக்கு எதிர்ச்சொல். நகல் என்றால் யீளஷெலிமு என்பது பொருள்.

ஆகவே, உண்மைப் பொருளைக் குறிப்பது அசல் என்னும் சொல். இரண்டையும் சேர்த்து, உறுதியாகக் கூறுவதற்காக நம்மவர்களால் உருவாக்கப்பட்டு, பயன்படுத்தப்படும் சொல் அச்சு அசல் என்பது. இன்றும் வழக்கில் உள்ளது இச்சொல்.

### அட்டக்கருப்பு



அளவுக்கு அதிகமான கருமை நிறத்தைக் குறிக்க அட்டக்கருப்பு என்னும் சொல்லைப் பயன்படுத்துவது நகரத்தார்களின் வழக்கம். கறுப்பு, கருப்பு இதில் எது சரி என்பது இன்னும் பலருக்கு சந்தேகத்தைத் தரும்.

கருப்பு என்பதே சரி. கறுப்பு என்னும் சொல் கோபத்தைக் குறிப்பதால் அதனைப்

பயன்படுத்துவது தவறு. கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள் (வெகுளி கோபம்) என்று தொல்காப்பியம் சுட்டுகிறது.

### அட்டணைக்கால்

பெரியவங்க இருக்கும்போது, என்னடா அட்டணக்கால் போட்டு உட்காந்துருக்க, ஒரு மரியாதையில்ல. எந்திரிச்சு உள்ள போ என்று இருபது ஆண்டுகளுக்கு முன்புவரை நம் வீடுகளில் ஒலித்த ஒரு வாக்கியம். அட்டம்+அணை+கால்=அட்டணைக்கால். அட்டம் என்றால் குறுக்கு என்பது பொருள், அணை என்றால் கால்களை ஒன்றோடொன்று அணைத்துக்கொள்வது. நாற்காலிகளில் அமர்ந்து கொண்டு கால்களை ஒன்றின் மீது ஒன்று குறுக்காக வைத்துக்கொள்வது அட்டணக்கால் என்று அழைக்கப்படுகிறது. இன்றும் இச்சொல் வழக்கில் உள்ளது.



இன்று பொதுவாக குழந்தைகளுக்குப் பெரியவர்களின் மீதான மரியாதை குறைந்து வருகிறது. நம் சமூகம் வயதுக்கும், பெரியவர்களுக்கும், முன்னோர்களுக்கும் மரியாதை கொடுத்து, அவர்களை வழிபடுகின்ற சமூகம். அப்பண்புகளை சிறுவயது முதலே நம் குழந்தைகளிடம் கொண்டு சேர்ப்பது நம் கடமை.

தொடர்ந்து பேசுவோம் ...

# உழைப்பே உன்னதம்

மண்ணும் விண்ணும் குளிர
மேகம் நீரைப் பொழிய
வெயில் மழை பேதமின்றி
உழைக்கும் கரங்களை நம்பி
உலகம் சுழலும் உண்மை
உழைப்பில் உண்டு நன்மை

பயிரும் விளைந்து செழிக்கும்
உயிர்கள் பசியாறி சுகிக்கும்
தீதில்லா தொழில்கள் பலவுண்டு
மெய்வருத்த உழைப்பு அதில் கண்டு
முன்னேறும் வாழ்வில் வசந்தமுண்டு

சோர்வைக் களையும் தொழிலாளி
வியர்வை சிந்தும் உழைப்பாளி
அண்டத்தின் ஆணிவேர் ஆவர்
பண்பாடு காக்கும் மானிடர்

களைப்பை ஒதுக்கி கண்ணயராது
உழைப்பை விதைக்கும் உன்னதம்
உழைப்பு ஒன்றே உத்தமம்
நிலைத்து வாழ வழிவகுக்கும்

நலமான வாழ்வு நல்கும்
சுயமான உழைப்பு தங்கம்
உழைக்கும் வர்க்கம் உருவாக்கும்
மண்ணில் விண்ணுலக சொர்க்கம்



– அரு. சிவகாமி இராமனாதன்
ஒக்கூர்– நவிமும்பை




# விசாக மகத்துவம்!


தைப்பூசம் , மாசிமகம் , பங்குனி உத்திரம் , சித்ரா பௌர்ணமி போன்று வைகாசி விசாகமும் தெய்வீக சிறப்பு மிக்க தினமாகும் கலியுகவரதனாகிய தமிழ்க் கடவுள் முருகப்பெருமான் அவதரித்தது இப்பொன்னாளிலேயாகும் .

சூரபத்மனின் கொடுமைகளை தாங்க முடியாத தேவர்கள் சிவபெருமானை வேண்டியபோது , சத்யோஜாத , வாமதேவம் , அஹோரம் ,தற்புருஷம் ,ஈசானம், ,அதோமுகம் என தனது நெற்றிக்கண்ணில் தோன்றிய ஆறு முகங்களை தீப்பொறிகளாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டதே அழகன் முருகனின் அவதாரம் . ஆறு தீப்பொறிகளும் சரவணப்பொய்கையில் ஆறு தாமரை மலர்களை ஆலிங்கனம் செய்ய ஞாலம், ஐஸ்வர்யம்,அழகு,வீரியம், வைராக்கியம், புகழ் என ஆறு குணங்கள் கொண்ட ஆறு குழந்தைகள் தோன்றின.

இந்த ஆறு குழந்தைகளும் திருக்கார்த்திகை பெண்களால் வளர்க்கப்பட்டனர் . ஒரு சமயம் அன்னை பார்வதி தேவி ஆறு குழந்தைகளையும் ஒன்றாக அணைக்கும் போது பன்னிரு விழிகளுடனும் , பன்னிரு கரங்களுடனும் ஆறுமுகன் அவதரித்தார் . அன்றைய நன்னாளே ' வைகாசி விசாகம்' ஆகும் . ஆறு நட்சத்திரங்களின் தொகுப்பே விசாக நட்சத்திரம் . வைகாசி விசாக விரதத்தை முழுமையாக கடைபிடித்தால் ஷஷ்டி விரதம் இருந்த பலனை அடையலாம் என கந்த புராணம் கூறுகின்றது . காக்கும் கடவுளான விஷ்ணு, அழிக்கும் கடவுளான சிவன் , படைக்கும் கடவுளான



நான்முகன் ஆகிய மும்மூர்த்திகளும் பிராணவப் பொருளான முருகனுக்குள் அடக்கம்.



முருகு என்றால் அழகு , இளமை எனப் பொருள் . விசாக நட்சத்திரத்தில் தோன்றியதால் விசாகன் என்ற பெயரும் முருகனுக்குண்டு. தமிழத்தில் அறுபடை வீடுகளிலும் உலககெங்கும் உள்ள ஏனைய ஆலயங்களிலும் ' வைகாசி விசாக திருநாள் '

வெகு சிறப்பாக அனுஷ்டிக்கப்படுவது வழக்கம். ஷஷ்டி

என்றால் ஆறு என அர்த்தம் .ஆறாம் எண்ணிற்கு தனிச்சிறப்பு இருப்பதாக பாம்பன் சுவாமிகள் 6666 முருகப்பெருமான் சிறப்பு பாடல்களை பாடியுள்ளார் .

விஷ்ணுவின் தசாவதாரங்களில் ஒன்றான நரசிம்ம அவதாரம் அவதரித்ததும் இவ் வைகாசி விசாகத்தன்றே . திருமழப்பாடி என்ற தலத்தில் சிவன் திருநடனம் ஆடியதும் இத்தினத்திலே . தர்மத்திற்கு அதிபதியான எமதர்மராஜன் அவதரித்ததும் ஓர் வைகாசி விசாகதென்றே . பாண்டவர்களில் ஒருவனான அர்ஜீனன் ஈசனிடம் ' பாசுபதம் ' என்ற அதிசக்தி வாய்ந்த அஸ்த்திரம் பெற்ற நாளும் இத்தினமே . சோழப் பேரரசனான ராஜராஜ சோழனின் சரிதத்தை நாடகமாக தஞ்சையில் அரங்கேற்றம் ஆனதும் இந்நாளில் என , தஞ்சை பெரிய கோவில் கல்வெட்டின் வாயிலாக அறியப்படுகிறது . பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான நம்மாழ்வார் பிறந்த தினமும் வைகாசி விசாகமே.



வடலூரில் இராமலிங்க வள்ளலார் சுவாமிகள் ' சத்யஞான சபை'யை தோற்றுவித்ததும் இப்புனித நாளிலேயாகும் . கௌதம புத்தர் பிறந்ததும் ,ஞானம் பெற்றதும் வைகாசி விசாகாதன்றே .

முருகப்பெருமானின் பூரண அனுக்கிரஹம் வாய்ந்த இந்நாளில் விரதம் மேற்க்கொண்டு வரும் பட்சத்தில் இப்பிறவி பயனை அடையலாம் என கந்தபுராணமும் , நக்கீரரின் திருமுருகாற்றுப்படையும் எடுத்துக் கூறுகிறது .

கொடு நோயிலிருந்து இவ்வுலகம் உய்ய இப்புனித நாளில் கலியுகக் கடவுள் கந்தனை வேண்டி வணங்குவோமாக ..

# உயிர் ... ஓர் ஒப்பற்ற சக்தி



ஆர்.எம். சண்முகம் செட்டியார்
சண்முகநாதபுரம்

ஊடகம் இல்லாது மின்சாரம் ஏது?
விறகு இல்லாது நெருப்பு ஏது?
பொருள் இல்லாது சக்தி ஏது?
உடல் இல்லாமல் உயிர் உண்டோ?

மின்சாரம் – எண்ணிக்கை ஏது?
நெருப்பு – எண்ணிக்கை ஏது?
சக்தி – எண்ணிக்கை ஏது?
உயிரும் அவ்வழி – எண்ணிக்கை யாது?

மின்சாரம் உண்டாக்கலாம்
நெருப்பை உண்டாக்கலாம்.
சக்தியை உண்டாக்கலாம்.
உயிரை நீட்டவே முடியும்.

உயிர் தோன்றிய அன்று முதல்
இன்றுவரை ஓருயிர் பலவாய்
கோழி முட்டை கோழி முட்டை என
நீண்டு பிரிந்து விரிகிறது.

இலைகளுக்கு மறுபிறவி உண்டோ?
பூக்களுக்கு மறுபிறவி உண்டோ?
மாட்டிற்கு மறுபிறவி உண்டோ?
மனிதனுக்கும் அவ்வன்னமே.

ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் 25

# புலையன் வீட்டில் புனிதம் கண்ட இறைவன்

புலவர் த. கோவேந்தன், டி. லிட்

கல்வியும் விநயமும் நன்கு கற்ற பிராமணன் பசு, யானை, நாய், நாய் தின்னும் புலையன் முதலிய அனைவரையும் மெய்ஞ்ஞானிகள் சமமாகவே நோக்குவர் என்பது கண்ணன் வாக்கு



மெய்ஞ்ஞானிகளுக்கே இத்தகைய சமப்பார்வையிருப்பின், இறைவனிடம் சமப்பார்வை இல்லாமல் போகுமா? இறைவனது சமப்பார்வையைக் குறிக்கும் வரலாறு ஒன்று சூர்தாசர் குறிப்பிட்டுள்ளார் அதைக் காண்போம்.

புலையினத்தான் ஒருவன் இருந்தான். அவன் நாய் ஊன் உண்பவன். அவன் ஊமை. ஆதலால் அவனை அனைவரும் மூக சண்டாளன் என்றே அழைப்பர் ஊமையாகிய இழிகுலத்தான் என்பது அதற்குப் பொருள்

நாய்தின்னும் இழிகுலத்தான் ஆயினும், அவனிடம் ஓர் ஒப்பற்ற நற்பண்பு இருந்தது தன் தாய் தந்தையரைத் தெய்வமாகவே மதித்தான் மனப்பூர்வமாக அன்பு காட்டிப் பெற்றோர்க்குப் பணிவிடை செய்து வந்தான்

அவன் பெற்றோரிடம் வைத்த பக்தியின் சிறப்பால், அவன் வீடு,



பூமியில் தொடாமல், எவ்விதப் பற்றும் இன்றி அந்தரத்தில் நின்றது. அதுமட்டுமா?

இறைவன் அறவோன் ஆகிய அந்தணன் வடிவுகொண்டு, அந்த மூக சண்டாளன் வீட்டிலேயே நிரந்தரமாகத் தங்கினான்


இறுதியில் அந்த மூக சண்டாளனுடன், அவன் உறவுடைய அனைவரையும் பரமபதத்துக்கு அந்த இறைவன் அழைத்துச் சென்றான்.

ஞானிகள், ஊன்வாட உண்ணாது உயிர்காவ லிட்டு உடலில் பிரியாப் புலன் ஐந்தும்நொந்து தாம்வாட வாடத் தவம் செய்தும் பெறுவதற்கரிய பரமபதம்,

பெற்றோரைத் தெய்வமாகக் கருதிப் பணிவிடை செய்த ஒரு செயலாலேயே, நாய் தின்னும் புலையன் எளிதிற் பெற்று விட்டான்.

தவம் செய்து பெற இயலாததைத் தொண்டினால் பெற இயலும் என்பதற்கு இவ்வரலாறு எடுத்துக்காட்டு

## வாழ்க்கை



மனிதன் சொல்ல இறைவன்
கேட்பது – திருவாசகம்.
இறைவன் சொல்ல மனிதன்
கேட்பது – கீதை.
மனிதன் சொல்ல மனிதன்
கேட்பது – குறள்.
அருளாளன் சொல்ல ஞானிகள்
கேட்பது – திருவருட்பா.
ஞானிகள் சொல்ல ஞானிகள்
கேட்பது – திருமந்திரம்.
மகன் சொல்ல மகேசன் கேட்பது – பிரணவம்.
மனைவி சொல்ல கணவன்
கேட்பது – வாழ்க்கை.

# இளைஞனின் முரண்கள்



கவிஞர் எம்.சோலை
காரைக்குடி .

ஆறறிவுக் குயிலு நாங்க கைகள் உள்ள மயிலு
எங்களோடு சிநேகம் கொண்டு குடை பிடிக்கும் வெயிலு
அஞ்சு விரலும் பேசும் வார்த்தை தாளமாகும் கேளு
கால் முளைத்து கெண்டை மீனு கரையேறும் நாளு

வாரத்தில் ஒரு நாள் இனி கூடிப் போகக் கூடும்
ஏழுயில்ல இனி அது எட்டாக ஏனோ மாறும்
தேகத்தில் இரத்தமது தேனாய் தானே மாறும்
தேன் இன்றி பூவெல்லாம் கடையை இங்கு மூடும்

வெள்ளாடு வேங்கையாகிக் காடு சுத்தப் போகும்
வெள்ளைக்காரன் மீண்டும் வந்தால் விறகு வெட்ட வேணும்
காளமாடு கன்று போட்ட சேதி வந்து சேரும்
ஆம்பளைங்க கோலம் போட பூமி மெருகேறும்

பாட்டுக் கேட்கும் காதுகளே பாடல்களின் தாயின்மடி
பாம்பு எடுக்கும் படங்களெல்லாம் தியேட்டரிலே ஓடும் இனி
தானும் தான் வெள்ளையாகக் காக்காய்க்கும் ஆசை வரும்
தினந்தோறும் குளித்தால் கூடக் காக்காய் நிறம் கருப்பு நிறம்.

# கோடைக்கேற்ற குல்பி ஐஸ் ..!!



கொளுத்தும் வெயிலில் நன்கு ஜில்லென்று குடிக்க அல்லது சாப்பிட அனைவருக்கும் பிடிக்கும். அதற்காக கடைகளில் விற்கப்படும் செயற்கை சுவையூட்டிகள் மற்றும் கெமிக்கல்கள் கலந்து விற்கப்படும் ஜூஸ், ஐஸ் என்று வாங்கி சாப்பிடுவதற்கு பதிலாக, வீட்டில் இருக்கும் பொருட்களைக் கொண்டே உடலுக்கு குளிர்ச்சியை அளிக்கும் ஜூஸ், ஐஸ் க்ரீம் என்று செய்து சாப்பிட்டால், உடலுக்கு எவ்வித தீமையும் ஏற்படாது அல்லவா?

அதுவும் நீங்கள் குல்பி பிரியர் என்றால், அந்த குல்பியை வீட்டில் உள்ள ஒருசில பொருட்களைக் கொண்டே ஈஸியான முறையில் செய்யலாம். அதுவும் 1/2 லிட்டர் பாலும், 4 துண்டு பிரட்டும் இருந்தால், அட்டகாசமான சுவையில் குல்பியை செய்யலாம்.

இந்த குல்பியை ஒருமுறை வீட்டில் உள்ளோருக்கு செய்து கொடுத்தால், அடிக்கடி செய்து கொடுக்க கேட்பார்கள். அதுவும் தற்போது கோடை விடுமுறை என்பதால், வீட்டில் இருக்கும் குழந்தைகளுக்கு இதை கட்டாயம் செய்து கொடுங்கள். இதனால் கடைகளில் ஐஸ் க்ரீம் கேட்கவே மாட்டார்கள்.

உங்களுக்கு குல்பியை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? கீழே குல்பி ஐஸ் க்ரீம் ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து

எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

தேவையான பொருட்கள்:

- பால் – 1/2 லிட்டர்
- பாதாம் – 10
- முந்திரி – 10
- பிரட் – 4 துண்டு
- சர்க்கரை – 1/4 கப்
- ஏலக்காய் பொடி – சிறிது
- உப்பு – 1 சிட்டிகை



செய்முறை:

- முதலில் ஒரு அகலமான நாண்ஸ்டிக் கடாயை அடுப்பில் வைத்து, அதில் பாலை ஊற்றி கரண்டியால் நன்கு கிளறி விட்டு காய்ச்ச வேண்டும். அப்படி காய்ச்சும் போது, கடாயைச் சுற்றி பாலேடு உருவாகத் தொடங்கும். அதை அவ்வப்போது எடுத்து விட்டு கிளறி கொதிக்க வைக்க வேண்டும்.
- பாலானது நன்கு கொதித்துக் கொண்டிருக்கும் போது, மிக்சர் ஜாரில் பாதாம், முந்திரியைப் போட்டு கொரகொரவென்று பொடித்து, ஒரு கிண்ணத்தில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.
- பின் அதே மிக்சர் ஜாரில் 4 பிரட் துண்டுகளை முனைப் பகுதிகளை நீக்கி விட்டு, கைகளால் துண்டுகளாக்கிப் போட்டு அரைத்து பொடி செய்து, அதையும் தனியாக ஒரு கிண்ணத்தில் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.
- பின்பு பாலானது ஓரளவு சுண்டி வந்ததும், அதில் சர்க்கரையை சேர்த்து கிளறி, மிதமான தீயில் வைத்து 2 நிமிடம் கொதிக்க வைக்க வேண்டும்.

- பின் அதில் பிரட் தூளை சேர்த்து நன்கு கிளறி விட வேண்டும். அப்படி கிளறும் போது முனைகளில் சேரும் ஏடுகளை எடுத்துவிட்டு கிளறி விட்டு கொதிக்க வைக்க வேண்டும்.

- அடுத்து அரைத்து வைத்துள்ள பாதாம், முந்திரி பொடியை சேர்த்து கிளறி, பாலானது நன்கு கெட்டியாகத் தொடங்கி விட்டால், அதில் ஏலக்காய் பொடியை சேர்த்து ஒருமுறை கிளறி, பின் ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து கிளறி இறக்கி, நன்கு குளிர வைக்க வேண்டும்.

- பாலானது நன்கு குளிர்ந்ததும், அதில் ஐஸ்க்ரீம் மோல்டு அல்லது ஒரு டம்ளரில் ஊற்றி வைக்க வேண்டும்.

- பின் அந்த மோல்டு அல்லது டம்ளரை அலுமினியத் தாள் அல்லது பாலிதீன் கவர் கொண்டு நன்கு மூடி, நடுவே ஒரு துளையிட்டு, ஐஸ்க்ரீம் குச்சியை நடுவே வைத்து, ஃப்ரீசரில் சுமார் 8 மணிநேரம் வைத்து எடுக்க வேண்டும். முடிந்த வரை இந்த குல்பியை இரவு நேரத்தில் செய்து வைப்பது நல்லது. இதனால் எளிதில் குல்பி செட் ஆகிவிடும்.

- 8 மணிநேரம் கழித்து, ஃப்ரிட்ஜ்ஜில் இருந்து ஐஸ்க்ரீம் மோல்டை எடுத்து, ஒவ்வொன்றையும் சாதாரண நீரில் சிறிது நேரம் வைத்து, பின் எடுத்தால், எளிதில் குல்பி வந்துவிடும். இப்போது சுவையான குல்பி தயார்.







உமாராணி சொக்கலிங்கம்
நற்சாந்துப்பட்டி – ஈரோடு

இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். ஆச்சிகள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும்
அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை
இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas, USA

## சுத்தும் ராட்டினம்



சுத்தும் சுத்தும் ராட்டினமே
சுமக்கும் எங்களை ராட்டினமே
மெத்தென இருக்க இடந்தருமே
மேலே கூட்டிச் சென்றிடுமே
சித்திரம் போலெ கண்களுக்குச்
சிறிதாய் உருவம் காட்டிடுமே
பத்திர மாகக் கீழிறக்கி
பார்ப்போர் மகிழச் செய்திடுமே!

## ஐவகை நிலங்கள் பூமியிலே




ஐவகை நிலங்கள் பூமியிலே
அதன்பேர் சொல்வோம் வாருங்களே
அழகாய் மலைகள் குறிஞ்சியென்றார்
அடர்வனப் பகுதி முல்லையென்றார்
அடடா வயல்கள் மருதமென்றார்
அலைகடல் அருகே நெய்தலென்றார்
அனல்தரும் மணலைப் பாலையென்றார்
அதிசயம் இயற்கை நமக்களித்தார்

# நம்மிடமே இருக்கு மருந்து




சோம்பு(பெருஞ்சீரகம்), அஞ்சறைப் பெட்டியில் உள்ள வாசனை மசாலாப் பொருட்களில் இதுவும் ஒன்று.

நம் நாட்டில் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு மசாலா பொருட்களிலும் தனித்துவமான சுவையும், மணமும், மருத்துவ நன்மைகளும் நிறைந்துள்ளன. நன்மை தரும் மசாலா பொருட்களில் சோம்பும் நிச்சயமாக இடம்பெறும்.

சோம்பு, 'போனி குலம்' இனத்தைச் சேர்ந்த கேரட் குடும்பத்தில் ஒரு பூக்கும் தாவரம். உலர்ந்த மண்ணில் வளரும் தாவரம். பொதுவாக, மசாலா பொருட்கள் இயற்கையில் சூடாக இருக்கும். ஆனால், சோம்பு மட்டுமே குளிர்ச்சி மற்றும் இனிப்பு பண்புகள் கொண்டது. சோம்பு சாத்வீக குணம் கொண்டதால் மனதை புத்துணர்ச்சியடைய செய்கிறது.

இது நம்நாட்டின் உணவுகளின் சுவையை அதிகரிக்க பயன்படுகிறது. மேலும் செரிமானப் பிரச்சினைகளுக்கான பழங்கால தீர்வாக சோம்பு(பெருஞ்சீரகம் ) இருந்துள்ளன. கிட்டத்தட்ட ஒவ்வொரு சமையலறையிலும் இது காணப்படுகின்றன.

சோம்பு(பெருஞ்சீரகம் ) விதைகளின் இனிமையான மற்றும் சக்திவாய்ந்த சுவையை, நவீன பிரெஞ்சு மற்றும் இத்தாலிய சமையலில் மிகவும் பிரபலமாக பயன்படுத்துகிறது. அதன் தனித்துவமான வாசனை

மற்றும் சுவை தவிர, இதில் மருத்துவ நன்மைகள் இருப்பதாக பண்டைய காலங்களிலிருந்து குறிப்பிடப்பட்டுள்ளன.

சோம்பு(பெருஞ்சீரகம் ) விதைகள் செரிமானத்தை அதிகரிக்கும் பண்புகளுக்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் உடல் பருமனைக் கட்டுப்படுத்த ரோமானியர்கள் இதைப் பயன்படுத்தியதாகக் கூறப்படுகிறது .

இந்தியாவில், உணவுக்குப் பிறகு வெற்று அல்லது சர்க்கரை பூசப்பட்ட மிட்டாய் போல மென்று சாப்பிடுவது இயல்பானது, உலகின் பல பகுதிகளில் மக்கள் அவற்றை சிறிது உப்பு அல்லது சர்க்கரையுடன் வறுத்து சிற்றுண்டியை உருவாக்குகிறார்கள்.கால்சியம், வைட்டமின் சி, இரும்பு, மெக்னீசியம் மற்றும் பொட்டாசியம் நிறைந்த, சோம்பு(பெருஞ்சீரகம் ) விதைகள், எடையை குறைப்பது மட்டுமல்லாமல், புற்றுநோயைத் தடுக்கும் என்று கூறப்படுகிறது, ஏனெனில் அவற்றில் அனெத்தோல் என்ற கலவை உள்ளது. இதைத்தவிர சோம்பில் ஆன்டி ஆக்ஸிடன்ட், ஆன்டி பாக்டீரியல் மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகளும் காணப்படுகின்றன.



இது ஆராய்ச்சியின் படி மார்பக புற்றுநோய் செல்களை அழித்து பரவுவதை நிறுத்துகிறது. மேலும் இதிலுள்ள அனெத்தோல் பாலூட்டும் தாய்மார்களுக்கு பால் உற்பத்தியைத் தூண்டுவதாகவும் கூறப்படுகிறது.

ஆயுர்வேதத்தில் சோம்பு(பெருஞ்சீரகம் ) செரிமானம் குறித்த பணியில் சிறப்புப் பங்கு வகிக்கிறது. அதன் குளிர்ச்சி மற்றும் இனிப்பு பண்புகள் காரணமாக, செரிமானத்தை வலுப்படுத்துகிறது .அதனால் இது ஒரு சிறந்த செரிமான தேர்வாக அமைகிறது. அதிகப்படியான வாயுவால் செரிமானத்திற்குப் பிந்தைய பிரச்சனைகளை அனுபவிக்கும் எவருக்கும் சோம்பு(பெருஞ்சீரகம்) உதவியாக இருக்கும்.

சோம்பு சாப்பிடுவதால் கிடைக்கக்கூடிய நன்மைகளை இந்தக் கட்டுரையில் காணலாம்.

### உடல் எடையை குறைக்க உதவும்



சோம்பு, உடல் எடையை குறைக்க சிறந்தது. இந்த அதிசய மசாலா பொருளானது உங்களுடைய வளர்ச்சிதை மாற்றத்தை மேம்படுத்த உதவும். உடல் எடையை குறைக்க விரும்புபவர்கள் ஒரு கப் சோம்பு தண்ணீரை தங்கள் தினசரி உணவு முறையில் செய்து கொள்ளலாம்.

### வாயை புத்துணர்ச்சியாக வைத்துக் கொள்ள உதவும்

இந்தியாவில் ஒவ்வொரு உணவகத்திலும் உணவிற்கு பிறகு சோம்பு வழங்கப்படுகிறது. சோம்பில் உள்ள அத்தியாவசிய எண்ணெய்கள் வாய் துர்நாற்றத்தை தடுக்க உதவுகின்றன. வெங்காயம் மற்றும் பூண்டு அதிகம் சேர்த்த உணவுகளை சாப்பிட்ட பிறகு வாயில் துர்நாற்றம் ஏற்படுவது இயல்பானது. இது போன்ற உணவுகளை சாப்பிட்ட பிறகு ஒரு ஸ்பூன் சோம்பை சாப்பிட்டால் துர்நாற்றத்தை தடுக்கலாம். சோம்பை சாப்பிடுவதற்கு பதிலாக சோம்பு சேர்த்து கொதிக்க வைத்த தண்ணீரை மவுத்வாஷ் ஆகவும் பயன்படுத்தலாம்.

### முகப்பருவை தடுக்கும்

பல பெண்களுக்கும் முகப்பரு ஒரு பிரச்சனையாகவே இருந்து வருகிறது. இதற்கான ஒரு சிலர் மருந்துகள் அல்லது சிகிச்சைகளை எடுத்துக் கொள்கிறார்கள். முகப்பருக்களை தடுக்க தினமும் ஒரு ஸ்பூன் சோம்பை மென்று சாப்பிடலாம். சோம்பில் உள்ள ஆன்டி பாக்டீரியல் மற்றும் ஆன்டி ஆக்ஸிடன்ட் பண்புகள் முகத்திற்கு இயற்கையான பொலிவை கொடுக்கின்றன.

### செரிமானத்திற்கு உதவும்

அஜீரண பிரச்சனைகளை தடுக்க உணவிற்கு பிறகு சோம்பை மென்று சாப்பிடலாம். இவ்வாறு செய்வதால் வாயு, வயிற்றுப் பொருமல் போன்ற வயிறு சார்ந்த பிரச்சினைகளில் இருந்து விடுபடலாம்.

### இரத்தத்தை சுத்திகரிக்க உதவும்

சோம்பில் உள்ள நார்ச்சத்துக்களும், அத்தியாவசிய எண்ணெய்களும் உடலில் உள்ள தேவையற்ற நச்சுக்களை நீக்கி இரத்தத்தை சுத்திகரிக்க உதவுகின்றன. சோம்பு நீர் குடிப்பது இரத்தத்தில் உள்ள அதிகப்படியான யூரிக் அமிலத்தை வெளியேற்றவும், குறைக்கவும் உதவுகிறது. இது கல்லீரலில் உள்ள கொழுப்புகளின் செரிமானத்தையும் ஆதரிக்கிறது. சோம்பு நீரை குடித்து வர சிறுநீரக தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பையும் குறைக்கலாம்.

### இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த உதவும்

சோம்பில் உள்ள பொட்டாசியம் இதயத்துடிப்பு மற்றும் இரத்த அழுத்தத்தை கட்டுக்குள் வைத்திருக்க உதவுகிறது.

### எலும்புகளுக்கு நன்மை தரும்

வலுவான எலும்புகளை பெற தினமும் ஒரு ஸ்பூன் சோம்பை எடுத்துக் கொள்ளலாம். இதில் உள்ள கால்சியம், மெக்னீசியம், பாஸ்பரஸ், வைட்டமின் லு போன்ற சத்துக்கள் எலும்புகளை வலுவாக்க உதவுகின்றன.

(பொறுப்பு துறப்பு: அன்புள்ள வாசகரே, இந்தக் கட்டுரை உங்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இதை எழுதுவதில் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களின் உதவியை நாங்கள் பெற்றுள்ளோம். இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். நாம் நகரத்தார் மின்னிதழ் இந்த தகவல்களை உறுதிப்படுத்தவில்லை.)

# சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு



நமது சிறுவாபுரி நகர விடுதியில் பங்குனி மாத உபரி கிருத்திகை 11/04/2024 வியாழக்கிழமை அன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு வேலுக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

பக்தர்கள் திரளாக கலந்த இந்த நிகழ்வில் காலை மற்றும் மதியம் அன்னதானம் உபயதாரர்கள்

கானாடுகாத்தான் திரு.K.R.லெட்சுமணன் செட்டியார் குடும்பத்தினர் மற்றும் கொப்பனாபட்டி திருமதி.K.N.மீனாட்சி ஆச்சி குடும்பத்தினர் குடும்பத்தினர் சார்பில் நடைபெற்றது.

வழிபாடு ஏற்பாடுகளை நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் குழுவினர் செய்திருந்தனர்.

நகரத்தார் பெருமக்கள் சிறுவாபுரி மாத கிருத்திகை வழிபாட்டு அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ள பின்வரும் நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் அமைப்பின் அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளலாம் .

திரு.SP சிதம்பரம் புரவலர் (9444274720)
திரு.K.சிதம்பரம் தலைவர் (9080264411)
திரு.PR.மீனாட்சிசுந்தரம் செயலாளர் (9444183688)
திரு.முத்தையா சம்பத் பொருளாளர் (9710066980)

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

க .ஹர்ஷவர்த்தினிஶ்ரீ (நெற்குப்பை)

நகரத்தார்கேப்பிட்டல் சென்னை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஶ்ரீ (நெற்குப்பை) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும் , ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட பங்கின் பகுப்பாய்வினையையும் , குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

இந்த இதழில் ஒரு நிறுவனத்தைபற்றிய விரிவானபகுத்தாய்வு:

POONAWALLA FINCORP

## பூனாவால்லா ஃபின்கார்ப் லிமிடெட் & நிறுவனத்தைப் பற்றி:

பூனாவால்லா ஃபின்கார்ப் லிமிடெட் என்பது நுகர்வோர் மற்றும் MSME நிதியளிப்பில் ஈடுபட்டுள்ள ஒரு இந்திய வங்கி அல்லாத நிதி நிறுவனமாகும். இந்நிறுவனம் முன்னர் மாக்மா ஃபின்கார்ப் என்ற பெயரில் செயல் பட்டு வந்தது. தற்போது இது புனேவை தலைமையிடமாகக் கொண்டு ஆதார் பூனாவல்லா தலைமையில் பூனாவால்லா ஃபின்கார்ப் லிமிடெட் என்ற பெயரில் இயங்கி வருகிறது.

இந்நிறுவனம் 1988 ஆம் ஆண்டு MAYANK PODDAR மற்றும் SANJAY CHAMRIA ஆகியோரால் MAGMA LEASING LIMITED என்ற பெயரில் செயல் பட தொடங்கியது. இந்நிறுவனம்

1996 ஆம் ஆண்டில் வாகனம் மற்றும் கட்டுமான உபகரணங்களுக்கான சில்லறை வணிகத்தில் நுழைந்தது.

2000 ஆம் ஆண்டில் CONSORTIUM FINANCE LTD நிறுவனத்தை கையகப்படுத்தியதன் மூலம் இந்நிறுவனம் தனது செயல்பாட்டை வட இந்தியா முழுவதும் விரிவுபடுத்தியது.

2007 ஆம் ஆண்டில் SHRACHI INFRASTRUCTURE FINANCE இந் நிறுவனத்துடன் இணைந்தது. இதனால் தெற்கு மற்றும் மேற்கு இந்தியாவிலும் திறம்பட செயல்பட தொடங்கியது. அதே ஆண்டில் டிராக்டர் நிதியுதவி வணிகத்தில் நுழைவதற்காக இந்நிறுவனம் INTERNATIONAL TRACTORS LIMITED (ITL) உடன் ஒரு கூட்டு முயற்சியை (JV) உருவாக்கியது.

2008 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் MAGMA FINCORP LIMITED என்ற பெயரில் செயல் பட தொடங்கியது.

2009 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ஜெர்மானிய காப்பீட்டு நிறுவனமான HDI GLOBAL நிறுவனத்துடன் இணைந்து பொது காப்பீட்டு வணிகத்தில் நுழைவதற்கான ஒரு கூட்டு முயற்சியை உருவாக்கியது. இதன் செயல் பாடுகள் 2012 இல் தொடங்கியது. அதே ஆண்டில் உலகளாவிய கடன் தகவல் சேவை நிறுவனத்தின் இந்திய பிரிவான EXPERIAN CREDIT INFORMATION COMPANY OF INDIA PVT LTD நிறுவனத்தின் 7% பங்குகளை இந்நிறுவனம் வாங்கியது. 2011 ஆம் ஆண்டில் உலகளாவிய PE நிறுவனமான KOHLBERG KRAVIS ROBERTS மற்றும் உலக வங்கி குழுமத்தின் ஒரு அங்கமான சர்வதேச நிதி கழகம் இந்நிறுவனத்தில் சுமார் 100 மில்லியன் டாலர்களை முதலீடு செய்தது.

2012 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் GE MONEY HOUSING FINANCE மற்றும் GE MONEY FINANCIAL SERVICES - இன் வீட்டு சமபங்கு கடன் போர்ட்ஃபோலியோவை GE CAPITAL INDIA என்ற நிறுவனத்திடமிருந்து வாங்கியது.

2015 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூபாய் 500 கோடி முதலீட்டை KKR, INDIUM V, மற்றும் LEAPFROG INVESTMENT நிறுவனத்தின் மூலம் பெற்றுள்ளது.

2016 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் தலைவராக இருந்த MAYANK PODDAR பதவியில் இருந்து விலகினார்.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்நிறுவனம் ரூபாய் 500 கோடியை QIP மூலம் திரட்டியது.

2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், ADAR POONAWALLA வின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்த RISING SUN HOLDING என்ற நிறுவனம் இந்நிறுவனத்தில் முதலீடு செய்தது. இதனை தொடர்ந்து ICICI VENTURES, CYZA CHEM, மற்றும் MORGAN STANLEY மூலம் தனது மூலதனத்தை அதிகரிக்க செய்தது.

RISING SUN HOLDING முதலீட்டை தொடர்ந்து இந்நிறுவனத்தின் பெயரை POONAWALLA FINCORP என 20 ஜூலை 2021 அன்று மாற்றியது.

டிசம்பர் 2022 ஆம் ஆண்டில் இந்நிறுவனம், இதன் துணை நிறுவனமான POONAWALLA HOUSING FINANCE ஐ TPG GLOBAL நிறுவனமான PERSEUS SG என்ற நிறுவனத்திற்கு ரூபாய் 3900 கோடிக்கு விற்பனை செய்வதாக அறிவித்தது.

## நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

சந்தை மூலதனம் ரூபாய் 37941.90 கோடி

முக மதிப்பு ரூபாய் 2

புத்தக மதிப்பு ரூபாய் 72.23

PE விகிதம் : 24.68

ROCE : 19.20

ROE : 9.96

Debt to Equity : 1.62

EPS : 21.73

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x) 24.68 | EPS - TTM (₹) 21.73 |
| MCap (₹ Cr.) 37,941.90 | Sectoral MCap Rank 12 |
| PB Ratio (x) 5.56 | Div Yield (%) 0.41 |
| Face Value (₹) 2.00 | Beta 0.97 |
| VWAP (₹) 486.35 | 52W H/L (₹) 519.70 / 318.55 |

**Poonawalla Fincorp Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↓-0.89% |
| 1 Week | -1.59% |
| 1 Month | ↑2.48% |
| 3 Months | 3.98% |
| 1 Year | 50.81% |
| 3 Years | 311.42% |
| 5 Years | ↑283.22% |

## நிறுவனத்தின் நிதி நிலை:

இந்நிறுவனத்தின் வருவாய் கடந்த இரண்டு ஆண்டுகளாக கணிசமான அளவில் உயர்ந்து உள்ளது. மார்ச் 2022 ஆம் ஆண்டு முடிவில் இந்நிறுவனத்தின் வருவாய் ரூபாய் 1536 கோடி ரூபாய் ஆகும். இது கணிசமாக உயர்ந்து ரூபாய் 2193 மற்றும் ரூபாய் 3114 கோடியை முறையே 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டில் ஈட்டியுள்ளது.

வரிக்கு முந்தைய வருவாய் மற்றும் வரிக்கு பின் உள்ள மொத்த வருவாயானது கணிசமான அளவில் உயர்ந்து உள்ளது. கடந்த நிதி ஆண்டில் இந்நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூபாய் 585 கோடி.

# இது இந்த நிதி ஆண்டில் ரூபாய் 2056 கோடியை ஈட்டியுள்ளது அதன் வளர்ச்சியை உறுதி செய்கிறது.

**INCOME (P&L)** | BALANCE SHEET | CASH FLOW | RATIOS | CONSOLIDATED

**INSIGHTS**

**Beating 3 Yr Revenue CAGR**

Company's annual revenue growth of 56.8% outperformed its 3 year CAGR of 18.66%. (Source: Standalone Financials)

**Employee & Interest Expense**

Company has spent 30.71% of its operating revenues towards interest expenses and 26.56% towards employee cost in the year ending 31 Mar, 2023. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | MAR 2024 | DEC 2023 | SEP 2023 | JUN 2023 | MAR 2023 |
|---|---|---|---|---|---|
| Total Income | 921.73 | 773.76 | 745.27 | 707.30 | 580.71 |
| Total Income Growth (%) | ↑19.12 | ↑3.82 | ↑5.37 | ↑21.80 | ↓-18.92 |
| Total Expenses | 255.20 | 193.29 | -594.83 | 209.93 | 171.32 |
| Total Expenses Growth (%) | ↑32.03 | ↓-132.49 | ↓-383.35 | ↑22.54 | ↓-28.17 |
| EBIT | 666.53 | 580.47 | 1,340.10 | 497.37 | 409.39 |
| EBIT Growth (%) | ↑14.83 | ↓-56.68 | ↑169.44 | ↑21.49 | ↓-14.30 |
| Profit after Tax (PAT) | 331.70 | 265.14 | 860.17 | 225.74 | 198.37 |
| PAT Growth (%) | ↑25.10 | ↓-69.18 | ↑281.04 | ↑13.80 | ↑8.93 |
| EBIT Margin (%) | 72.31 | 75.02 | 179.81 | 70.32 | 70.50 |
| Net Profit Margin (%) | 35.99 | 34.27 | 115.42 | 31.92 | 34.16 |
| Basic EPS (₹) | 4.31 | 3.45 | 11.20 | 2.94 | 2.59 |

INCOME (P&L) | **BALANCE SHEET** | CASH FLOW | RATIOS | CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 23,220.61 | 16,442.70 | 13,212.18 | 15,239.72 | 16,789.28 |
| Total Assets Growth (%) | ↑41.22 | ↑24.45 | ↓-13.30 | ↓-9.23 | ↑12.72 |
| Total Liabilities | 16,347.44 | 10,384.48 | 11,017.88 | 12,491.72 | 14,045.39 |
| Total Liabilities Growth (%) | ↑57.42 | ↓-5.75 | ↓-11.80 | ↓-11.06 | ↑8.69 |
| Total Equity | 6,873.17 | 6,058.22 | 2,194.30 | 2,748.00 | 2,743.89 |
| Total Equity Growth (%) | ↑13.45 | ↑176.09 | ↓-20.15 | ↑0.15 | ↑39.14 |
| Current Ratio (x) | 1.40 | 1.81 | 1.43 | 1.36 | 1.31 |
| Total Debt to Equity (x) | 1.62 | 1.64 | 4.75 | 4.36 | 4.79 |
| Contingent Liabilities | 27.23 | 228.14 | 198.07 | 159.15 | 168.21 |

INCOME (P&L) | BALANCE SHEET | **CASH FLOW** | RATIOS | CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | -5,236.54 | -3,049.29 | 1,644.30 | 998.24 | -922.48 |
| Net Cash used in Investing Activities | -110.45 | 143.25 | 81.35 | -280.70 | -97.85 |
| Net Cash flow from Financing Activities | 5,748.47 | 2,902.93 | -1,573.78 | -1,082.56 | 1,489.71 |
| Net Cash Flow | 401.48 | -3.11 | 151.86 | -365.02 | 469.38 |
| Closing Cash & Cash Equivalent | 756.19 | 354.71 | 357.82 | 205.96 | 570.98 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↑113.18 | ↓-0.87 | ↑73.73 | ↓-63.93 | ↑461.99 |
| Total Debt/ CFO (x) | -2.12 | -3.25 | 6.34 | 12.01 | -14.24 |

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | **RATIOS** | CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 9.96 | 6.19 | -25.47 | 0.98 | 11.07 |
| Return on Capital Employed (%) | 19.20 | 15.70 | 7.82 | 31.25 | 35.98 |
| Return on Assets (%) | 2.94 | 2.28 | -4.23 | 0.17 | 1.81 |
| Interest Coverage Ratio (x) | 2.35 | 1.76 | 0.37 | 1.06 | 1.39 |
| Asset Turnover Ratio (x) | 0.11 | 0.12 | 0.14 | 16.49 | 14.61 |
| Price to Earnings (x) | 32.89 | 55.56 | -5.31 | 17.06 | 10.42 |
| Price to Book (x) | 3.27 | 3.43 | 1.35 | 0.17 | 1.15 |
| EV/EBITDA (x) | 23.52 | 23.85 | 31.36 | 8.09 | 9.50 |
| EBITDA Margin (%) | 72.23 | 62.90 | 17.35 | 57.74 | 65.77 |

## மேம்பட்ட விளக்கப்படம்:




## சகநிறுவன ஒப்பீடு:

**POONAWALLA FINCORP STOCK PERFORMANCE** | RATIO PERFORMANCE | CHART | TABLE

**INSIGHTS**

**Stock Returns vs Nifty 100**


Stock gave a 3 year return of 315.1% as compared to Nifty 100 which gave a return of 56.29%. (as of last trading session)

**Stock Returns vs Nifty Financial Services**

Stock generated 315.1% return as compared to Nifty Financial Services which gave investors 37.11% return over 3 year time period. (as of last trading session)

Poonawalla Fincorp | Aditya Birla Cap. | Sundaram Finance | L&T Fin Holding | Search by Stock

1D | 1W | 1M | 3M | 6M | 1Y | 5Y



POONAWALLA FINCORP STOCK PERFORMANCE | RATIO PERFORMANCE | SEE ALL PARAMETERS

**INSIGHTS**

**Stock Returns vs Nifty 100**

Stock gave a 3 year return of 315.1% as compared to Nifty 100 which gave a return of 56.29%. (as of last trading session)

**Stock Returns vs Nifty Financial Services**

Stock generated 315.1% return as compared to Nifty Financial Services which gave investors 37.11% return over 3 year time period. (as of last trading session)

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| Poonawalla Fincorp | 24.68 | 5.56 | 0.00 | 0.00 | 10.13 | 0.00 |
| Aditya Birla Cap. × | 20.84 | 0.62 | 23.61 | 2.65 | 21.57 | 36.78 |
| Sundaram Finance × | 32.88 | 4.17 | 13.29 | 2.35 | 5.44 | 75.18 |
| L&T Fin Holding × | 18.31 | 1.92 | 7.54 | 1.52 | -2.75 | 62.05 |
| Motilal Oswal × | 18.62 | 5.58 | 27.95 | 7.66 | 24.95 | 57.24 |
| Add More | | | | | | |

*Annual Ratios (%)*

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:

இந்நிறுவனத்தின் பங்குகள் PROMOTOR வசம் 62.13%, FIIS வசம் 7.76%, DIIS வசம் 5.81% மற்றும் மீதமுள்ள பங்குகள் பொது மக்கள் வசம் உள்ளது.

## எமது பரிந்துரை:

நீண்ட கால அடிப்படையில் இந்நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான ரூபாய் 490 மற்றும் குறையும் தருவாயில் ரூபாய் 300 வரை வாங்கலாம். இலக்கு ரூபாய் 600, 800, 1000++++ கால வரையறை 24 –36 மாதங்கள்.

## இந்த மாத குறுகிய கால பங்குகள் பரிந்துரைகள்:

1. Epack Durable Ltd... Entry 190 to 200. Add More till 160. Target 1, 260 and Target 2, 290.

2. Pakka Limited... Entry 280 - 290. Add more till 220. Target 1, 340 and Target 2, 380.

3. Dhampur Bio Organics Ltd... Entry 130 to 135. Add more till 100 on the downside. Target 1, 180 and Target 2, 220.

4 . Hemisphere Properties India Ltd... Entry 200 to 210. Add more till 140 on the downside. Target 1, 260 and Target 2, 300

5 . Easy Trip Planners Ltd... Entry 43 to 45. Add more till 30 on the downside. Target 1, 60 and Target 2, 80

6 . HFCL Ltd... Entry 100 to 105. Add more till 80 on the downside. Target 1, 130 and Target 2, 160

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young Generation" can learn and start doing analysis toidentifypotentialstocks@ CorrectEntry / CorrectExit to win the Trade.By Investingin turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates** — Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This Month Class will be from Friday 18TH MAY 2024.

**Webinar Timings** — India Time: in 17:30Hrs-18.30 Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs Week Ends.

**# For further Details Contact:** +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com



# திருமண வாழ்வில் நவகிரகங்கள்

- ஜோதிடர் எல்லி



நவக்கிரகங்கள் தான் நம்மை ஆள்கிறது. அண்ட சராசரங்களுமே அதற்கு விதிவிலக்கில்லை என்கிற போது நாமெல்லாம் எம்மாத்திரம்.

இப்படி செயல்படுகிற கோள்கள் நம் திருமண வாழ்வில் என்னவெல்லாம் செய்கிறது என்னென்ன தீர்மானிக்கிறது என்பதனை இந்த கட்டுரை யில் அறியலாம்

களத்திர ஸ்தானம் என்கிற ஏழாம் பாவகத்தில் எந்த கிரகம் இருப்பது சிறப்பை தரும் என்று நீங்கள் சிந்திக்க தொடங்கினால் கிரகங்கள் இன்றி ஏழாம் இடம் சுத்தமாக இருப்பதே சுபம் என்பது ஜோதிட ரீதியான ஒரு விளக்கம். ஏழில் கிரகமின்றி இருந்த போதிலும் ஏழாம் இடத்தை பார்க்கும் கிரகத்தின் தாக்கமும் அங்கே உண்டு.

ஏழில் கிரகங்கள் இருப்பது அதன் ஆதிபத்ய ,காரகத்துவ பலன்களை ஜாதகருக்கு அளிக்கிறது. இது அவரின் திருமண வாழ்வில் எதிரொலிக்கும்.




## குரு

கோச்சார ரீதியாக குரு பகவான் ராசிக்கு 2ல் வருகையிலும் இரண்டாமிடத்தை பார்ப்பதும் அந்த ராசியினருக்கு திருமணயோகத்தை கொடுக்கிறது. ராசிக்கு ஏழாம் இடத்தை பார்வை செய்வதும் திருமணம் கைகூடுவதற்கு உதவுகிறது. இதெல்லாம் கோச்சார பலன்கள்.

இயற்கை சுபரான குரு பகவான் ஜாதகத்தில் லக்னத்திற்கு ஏழில் தனித்து நிற்பது பொதுவாக உபய லக்னங்களுக்கு கேந்திராதிபத்ய தோஷம் உண்டாக்கி திருமண தடை, மிக நீண்ட தாமதத்தினை ஏற்படுத்தி விடுகிறது. இதர லக்னங்களுக்கு ஏழில் குரு நிற்பது திருமண விசயத்தில் சிக்கல்களையே ஏற்படுத்துகிறது. இந்த இடத்தில் சனி பார்வை குருவிற்கு விழுவது நல்லது.

ஏழில் குரு நிற்பது ஜாதகரின் வாழ்க்கை துணை ஆசிரியர் பயிற்சி முடித்தவரோ, அல்லது போதனை தொழில் செய்பவராக இருக்கலாம். வாழ்க்கை துணைக்கு ஆலோசனை அளிப்பராக இருப்பார். வடக்கு மற்றும் வடகிழக்கு திசை யில் இருந்து வாழ்க்கை துணை அமையும்.

ஆண் ஜாதகத்தில் இப்படி இருந்தால் மனைவிக்கு கட்டுபட்டவராக ஜாதகர் இருப்பார், அனைத்து விசயத்திலும் மனைவியின் கையே ஓங்கி இருக்கும்.



## சூரியன்

அனைத்து கிரகங்களுக்கும் தன் ஒளியை அளிக்கும் சூரிய பகவான் ஏழில் இருப்பது பொதுவாக சிறப்பித்து கூறப்படுவதில்லை. கும்ப லக்னத்திற்கு ஆட்சி ஆனாலும் கணவன் மனைவி உறவில் சச்சரவுகள் உண்டாகவே செய்கிறது.

இங்கே சூரியன் அமர்வது ஜாதகரின் வாழ்க்கை துணை சராசரியை விட சற்று உயரமானவர். ஜாதகர் அடிக்கடி எரிச்சல் அடைவார். அதைவிட ஜாதகரின் துணை அதிக வெறுப்பு கொள்வார்.

கிழக்கு திசையில் இருந்து வரன் அமையும். ஏழாம் அதிபதி நிலையை யும் கணக்கில் கொள்ள வேண்டும்.

## சந்திரன்



மனதை ஆள்பவர் சந்திரன், உடல் காரகனும் கூட மிக வேகமாக நகரும் இவர் ஏழில் நிற்பது காதல் எண்ணங்களை ஜாதகருக்கு அதீதமாக்கும். சிலருக்கு நிறைய காதல்கள் வந்தவண்ணமாகவே இருக்கும். இது திருமணத்திற்கு பிறகும் கூட ஆண் ஜாதகர்களுக்கு தொடர்வது இல்லறத்தில் சிக்கல்கள் வந்து போகும். இருந்தாலும் மனைவியையும் இவங்க நேசிக்க தவறுவதில்லை. கற்பனா சக்தி அதிகம் பொங்கி வருவதால் கவிதை, வசீகரிக்கும் வார்த்தைகள் மூலம் எப்படியாவது குடும்பத்தில் சமாளித்து போவதில் கெட்டிகாரர்கள் தான். இவர்களுக்கு அழகிய வடிவான பெண் வாழ்க்கை துணையாக அமையும். பெண் ஜாதகர்களுக்கு ரசனையுள்ள இளகிய மனம்

படைத்த ஆண் கணவராக வர வாய்ப்பு.

இந்த அமைப்பு உள்ளவர்களுக்கு வியாபார குடும்பத்தில் வரன் ஏற்படும். சின்ன கடையாவது வைத்து இருப்பாங்க காய்கனி, மளிகை, ஸ்டால்னு ஏதாவது இருக்கும்.

## செவ்வாய்



ரத்தகாரகன், போர்க்காரகன், சுறுசுறுப்பு மற்றும் வேகத்திற்குரிய செவ்வாய் பகவான் வாழ்க்கை துணையினை குறிக்கும் ஏழில் நிற்பது தோஷம் என ஜாதகத்தில் சொல்லபடுகிறது.

ஏழில் செவ்வாய் என்பதே நம்மில் பலருக்கும் பயமுறுத்தும் அமைப்பு தான். ரிசப, துலாம் லக்னங்களுக்கு கூடுதலாக தாமதப்படுத்தும். சீக்கிரத்தில் முடிந்தால் இவர்களுக்கு கொஞ்ச வருடங்களுக்கு திருமண வாழ்க்கையே போராட்டம்தான் . ஏழில் செவ்வாய் உள்ள மற்ற லக்னகாரர்களுக்கும் இந்நிலை உண்டு தான். உறவில் முடிப்பது பெரிதாக பாதிப்பு இருக்காது.

செவ்வாய் தோஷமுள்ள ஜாதகங்களை இணைக்கலாம் மற்றபடி பெரிதாக பயம் வேண்டாம். பெண் ஜாதகத்தில் ஏழில் செவ்வாய் இருந்தால் ஆண் ஜாதகத்தில் இருப்பது அவசியம்.

ஏழில் செவ்வாய் அமையபெற்ற ஜாதகர்கள் சுறுசுறுப்பாக செயல்படுவார்கள். வாழ்க்கை துணை சற்றே டென்ஷன் பார்ட்டி எனலாம். திருமண வாழ்வில் அவ்வப்போது சச்சரவுகள் உண்டுதான்.

இவங்க கார்த்திகேயனை வழிபடுதல் சிறப்பு.

## புதன்



உபய லக்னகாரர்களான மிதுனம், கன்னி, தனுசு, மீனம் போன்றவர்களுக்கு இது மிக அபாயமான அமைப்புதான். திருமண வாழ்க்கையே திரிசங்கு சொர்க்கம் மாதிரி நிலையற்றதாக்கிவிடும். சிலருக்கு திருமணம் என்பதே கானல் நீராக போய்விடும் நிலையும் உண்டு தான். இதெல்லாம் ஏழாமிடத்தோடு சம்மந்தபடும் இதர கிரகங்கள் பொறுத்து பலன்கள் மாறுபடும்.

ஏழாமிட புதன் அமையப்பெற்ற ஜாதகர்களின் வாழ்க்கை துணை கொஞ்சம் புத்திசாலி, தகவல் தொழில் நுட்ப துறை சார்ந்த அறிவு இருக்கும். வட கிழக்கு திசையில் இருந்து வரன் எதிர்பார்க்கலாம் ,கூடவே ஏழாம் அதிபதி திசையையும் கணக்கில் கொள்ள வேண்டும். நட்பு வட்டமும் கூடும்.



## சுக்கிரன்

களத்திர காரகன் சுக்கிர பகவானே ஏழில் நிற்பது காரகோ பாவக கெடுதி ஆகிறது. ஆகவே இது திருமணம் மற்றும் காதல் விசயத்தில் குழப்பம், தடையினை ஏற்படுத்தி ஜாதகரை கலக்கத்தில் ஆழ்த்தி விடுகிறது.

ஏழில் சுக்கிரன் லைப் பார்ட்னர் ஜாலியான, கலை ஆர்வம் கொண்டவராக இருப்பார். ஜாதகரை விட வயது குறைந்தவராகவும் இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. தம்பதியர்கள் அந்நியோன்யம் உண்டுதான்.

## சனி



கர்ம காரகன் சனி பகவான் களத்திர ஸ்தானத்தில் அமர்வது தாமத மணம் தான். சனி மந்தகாரகன் ஆச்சே ஆனாலும் இங்கே அவர் வலிமை அடைவார் அதனால் வாழ்க்கை துணை உறுதியாக இருப்பார். ரொம்ப சிவப்பாக எதிர்பார்க்க முடியாது ஜாதகரை நிறைய வேலை வாங்குவார் வாழ்க்கை துணை. சின்னதா உடல் பாதிப்பு தம்பதியினருக்கு வந்து போகும்.

கடகம், சிம்ம லக்னங்களுக்கு லைப் பார்ட்னர் கை ஓங்கும். கன்னி லக்னத்திற்கு தெரிந்த, அறிமுகம் ஆன இடத்தில் மணம் அமையும்.

## ராகு

சாயா கிரகமான இயற்கை அசுபர் ராகு பகவான் களத்திர ஸ்தானத்தில் நிற்பது சர்ப்பதோஷத்தினை



ஏற்படுத்துகிறது. பொதுவாக அந்நியத்தில் மணவாழ்க்கை அமையும் என்றாலும் 5,7 அதிபதிகள் நிலையை பொறுத்து தான் முடிவுக்கு வர வேண்டும். சிலர் காதலில் விழுவதற்கும் வாய்ப்பு உண்டு. குரு பார்வை இல்லாத ராகு எனில் வாழ்க்கை துணை கொஞ்சம் நிறம் குறைவுதான்.

வரப்போகும் லைப் பார்ட்னர் கள்ளத்தனம், எதிர்மறை எண்ணங்கள் கொண்டவராக இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. எச்சரிக்கை பேர்வழியாக இருப்பார். தாம்பத்தியத்தில் அதிக ஈடுபாடு இருக்கும். சில காலங்களுக்கு வெறுமையாகவும் போகும்.

## கேது


ஞான காரகன் என்று போற்றப்படும் கேது பகவான் ஒரு இயற்கை அசுபர்தான். ராகுவை போல மற்றொரு நிழல் கிரகமான இவர் ஏழில் நிற்பதும் சர்ப்பதோஷமே.




பெண் ஜாதகத்தில் இந்த அமைப்பு எனில் கணவர் ஆன்மீக ஈடுபாடு, நாட்டம் உள்ளவராக இருக்க வாய்ப்பு உள்ளது. ராகு வை போல கறுப்பு கிடையாது ஆனால் சற்று வயோதிகம் கூடுதலாக இருக்கும் அல்லது வயதான தோற்றம் தெரியும். பற்றற்ற மனநிலை அவ்வப்போது வெளிப்படலாம். இங்கேயும் கேது விற்கு குரு பார்வை நன்மையே இது போல திருமண பாவகத்தில் நவகிரகங்கள் அமர்ந்து கொண்டு தத்தமது செயல்களை அரங்கேற்றி வரவே செய்கிறது.

மற்றுமொரு ஜோதிட தகவலுடன் அடுத்த இதழில் சந்திப்போம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர் . ஜோதிடம் ,தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் , ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர். தொடர்புக்கு : 99 44 86 59 43



# வெற்றியின் இரகசியம்...




நமது வெற்றிக்குத் தடையாக இருப்பது நமது பயம் தான். அதுவும் உண்மையான பயம் இல்லை கற்பனை பயம்.

நாம் இது நம்மால் முடியுமா? என கற்பனை செய்கிறோம்? ஒருவேளை இது தவறாக நடந்து விட்டால் என்ன செய்வது? என்று கற்பனை செய்கிறோம். இதுபோல பல கற்பனைகளை நாம் உருவாக்குகிறோம். அதை நினைத்து நினைத்து பயப்படுகிறோம்.

நமது பயத்திற்கு அது உண்மையா? கற்பனையா? என்கிற வேறுபாடு தெரிவதில்லை. உண்மையான பயம் வந்தாலும், கற்பனையில் பயம் வந்தாலும் ஒரே மாதிரியான விளைவை மட்டுமே அது ஏற்படுத்துகிறது. அதாவது, நமது உடலையும், மனதையும் பாதிப்படையச் செய்கிறது.

அதன் விளைவு தான் உடல் மற்றும் மனம் சார்ந்த பிரச்சனைகள்.

நமது மனமும், உடலும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்களைப் போன்றது ஒன்று பாதித்தாலும், மற்றொன்றும் சேர்ந்தே பாதிப்படைகிறது.

உடல்-மன ஆரோக்கியம் தான் நாம் சரியான முடிவுகளை எடுக்கவும், அதன்படி செயல்படவும் என நமது வெற்றிக்கு உறுதுணையாக இருக்கிறது.

எனவே கற்பனையில் பயந்து பயந்து நமது மனதை, நமது உடலை, நமது வெற்றியை, நமது நிம்மதியை, என நமது ஒட்டுமொத்த வாழ்க்கையையே வீணடிப்பதை நாம் உணர்ந்து அவை அனைத்தையும் நாம் மாற்றியமைக்க வேண்டும்.

நமது கற்பனை பயத்தை இன்றோடு நிறுத்திக் கொண்டு, நமது உழைப்பையும், அனுபவத்தையும் நாம் முழுமையாக நம்பி பயணிக்கத் தொடங்க வேண்டும்.

நமது அனுபவம், நம் மீதான நமது நம்பிக்கை, பயிற்சி, அதற்கு ஏற்ற முயற்சி என நம்மை நாமே செதுக்கிக் கொண்டு வெற்றிகரமான, மகிழ்ச்சியான, நிம்மதியான, அபரிமிதமான ஒரு வாழ்க்கையை நாம் வாழ வேண்டும்.



# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com